winmeen.com

# இரண்டாம் வார நடப்பு நிகழ்வுகள்

ஜூலை 2021

ஜூலை 08–14

**1.மத்திய ஐரோப்பிய பல்கலைக்கழக பொதுநலச் சங்கத்தின் பரிசு வென்ற KK ஷைலஜா சார்ந்த மாநிலம் எது?**



அ) தமிழ்நாடு

**ஆ) கேரளா ☑**

இ) கர்நாடகா

ஈ) அஸ்ஸாம்

✓ கேரளாவின் முன்னாள் நலவாழ்வு அமைச்சரான திருமதி KK ஷைலஜா (பொதுவாக "ஷைலாஜா ஆசிரியர்" என்று அழைக்கப்படுபவர்), பொது நலவாழ்வுச் சேவைகளில் அவரது தன்னலமற்ற அர்ப்பணிப்புக்காக மத்திய ஐரோப்பிய பல்கலைக்கழகத்தின் பொதுநலச் சங்கத்தின் பரிசை வென்றுள்ளார். சமுதாயத்தின் பொதுநலத்திற்காக செயலாற்றும் சிறந்த ஆளுமைகளுக்கு இந்த பரிசு வழங்கப்படுகிறது.

---

**2. நாஷா முக்த் பாரத் அபியானை செயல்படுத்துகிற அமைச்சகம் எது?**




அ) நலவாழ்வு மற்றும் குடும்பநல அமைச்சகம்

**ஆ) சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகம் ☑**

இ) உழவு மற்றும் உழவர்நல அமைச்சகம்

ஈ) சட்டம் மற்றும் நீதித்துறை அமைச்சகம்

✓ மத்திய சமூக நீதி & அதிகாரமளித்தல் அமைச்சகமானது நாஷா முக்த் பாரத் (போதை மருந்தில்லா பாரதம்) அபியானை செயல்படுத்துகிறது.

✓ மத்திய சமூக நீதி அமைச்சரானவர் அண்மையில் நாஷா முக்த் பாரத் அபியானுக்கான வலைத்தளத்தை தொடங்கிவைத்தார். மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகமானது இந்தியாவில் போதைப் பொருள் ஒழிப்புக்கான மைய அமைச்சகமாக உள்ளது.

---

**3. ஐநா பொதுச்சேவை நாள் அனுசரிக்கப்படுகிற தேதி எது?**




அ) ஜூன்.21

ஆ) ஜூன்.22

**இ) ஜூன்.23 ☑**

ஈ) ஜூன்.24

✓ ஆண்டுதோறும் ஜூன்.23 அன்று ஐக்கிய நாடுகளின் பொதுச்சேவை நாள் அனுசரிக்கப்படுகிறது. இந்த நாள், பொதுச்சேவையின் பங்கை அங்கீகரிக்கிறது, அதன் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறது மற்றும் உலகம் முழுவதுமுள்ள அரசு ஊழியர்களின் பணியை அங்கீகரிக்கிறது.

✓ "Innovating the Future Public Service: New Government Models for a New Era to Reach the SDGs" என்பது நடப்பாண்டில் (2021) வரும் இந்த கருப்பொருளாகும்.

---

**4. 2021'இல் G20 தலைமைப்பதவியை வகிக்கும் நாடு எது?**

அ) ரஷ்யா

**ஆ) இத்தாலி ☑**

இ) ஜெர்மனி

ஈ) பிரான்ஸ்

✓ நடப்பு 2021'இல், G20 கூட்டமைப்பின் தலைமைப்பதவியை இத்தாலி வகிக்கிறது. இது சமீபத்தில், G20 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சர்கள் கூட்டத்தை நடத்தியது.

✓ இந்திய ஒன்றியத்தின் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சர் சந்தோஷ் கங்வார், பேரறிவிப்பு மற்றும் EWG முன்னுரிமைகள் குறித்த அமைச்சர் உரையை வழங்குகிறார். G20 கல்வி அமைச்சர்கள் கூட்டத்தையும் இத்தாலி நடத்தியுள்ளது.

---

**5. வரிவசூல் தகவல் பரிமாற்றத்திற்கான எந்தக் கரீபியன் நாட்டின் ஒப்பந்தத்திற்கு இந்திய மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்தது?**



**அ) புனித வின்செண்ட் மற்றும் கிரெனடைன்ஸ் ☑**

ஆ) பார்படாஸ்

இ) டொமினிகா

ஈ) ஜமைக்கா

✓ கரீபியன் நாடான புனித வின்செண்ட் மற்றும் கிரெனடைன்ஸ் மற்றும் இந்தியா இடையே வரிவசூல் தொடர்பான தகவல்கள் மற்றும் உதவிகளை பகிர்ந்துகொள்ளும் ஒப்பந்தத்துக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

✓ இரு நாடுகளிடையேயான இந்தப் புதிய ஒப்பந்தம்மூலம், இருநாட்டின் பிரதிநிதிகளும், மற்ற நாடுகளுக்குச் சென்று தனிநபர்களிடம் வரி தொடர்பான விசாரணை மற்றும் ஆய்வுநடத்த முடியும். வங்கிகள் மற்றும் இதர நிதி நிறுவனங்களிலிருந்து நிதி தொடர்பான தகவல்களைப்பெற முடியும். இதன்மூலம் இருநாடுகளும், வரி ஏய்ப்பு மற்றும் கருப்புப்பண பதுக்கலை தடுக்கவியலும்.

---

**6. அண்மையில் ஐநா அமைப்பு ஒப்புதல் அளித்த CEOS கோஸ்ட் திட்டத்தில் ஈடுபட்டுள்ள இந்திய நிறுவனம் எது?**

**அ) ISRO ☑**

ஆ) எல்லைப்புறச் சாலைகள் அமைப்பு

இ) NTPC

ஈ) இந்திய கடற்படை

✓ Committee on Earth Observation Satellites – Coastal Observations, Applications, Services, and Tools என்பதன் சுருக்கமான 'CEOS COAST' என்பது ஒரு பன்னாட்டுத் திட்டமாகும்.

✓ இந்தத் திட்டத்தை அமெரிக்காவிலிருந்து ISRO'உம் தேசிய பெருங்கடல் மற்றும் வளிமண்டல நிர்வாகமும் இணைந்து வழிநடத்துகின்றன. செயற்கைக்கோள் மற்றும் நில-அடிப்படையிலான ஆய்வுக்குறிப்புகளின் அடிப்படையில் கடலோர தரவுகளின் துல்லியத்தை மேம்படுத்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது. இத்திட்டத்திற்கு சமீபத்தில் சர்வதேச கடல்சார் ஆணையம் தனது ஒப்புதலை அளித்தது.

---

**7. 'காவல் பிளஸ் திட்ட'த்தை செயல்படுத்துகிற மாநில அரசு எது?**



அ) தமிழ்நாடு

**ஆ) கேரளம் ☑**

இ) ஆந்திர பிரதேசம்

ஈ) ஒடிஸா

✓ பராமரிப்பு தேவைப்படும் குழந்தைகளுக்கும், பாலியல் சீண்டல்களுக்கு ஆளாகி தப்பிப்பிழைப்பவர்களுக்கும் ஆதரவாக, கடந்த 2020 டிசம்பரில், கேரள மாநில அரசு 'காவல் பிளஸ் திட்டத்தை' ஒரு சோதனை திட்டமாக அறிமுகப்படுத்தியது. இச்சோதனை திட்டத்தின் வெற்றியைத்தொடர்ந்து, கேரள பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்துறையானது காவல் பிளஸை மேலும் ஐந்து மாவட்டங்களுக்கு விரிவுபடுத்தவுள்ளது.

✓ இது வீடுகளில் உள்ள குழந்தைகள், சிறார் பராமரிப்பு நிறுவனங்கள் & சமூகநலக்குழுக்களுக்கு அப்பாலுள்ள சமூகத்தை உள்ளடக்குகிறது.

---

**8. DRDO பரிசோதனை செய்த புதிய தலைமுறை அணுசக்தி திறன் ஏவுகணையின் பெயர் என்ன?**



**அ) அக்னி–பி (பிரைம்) ☑**

ஆ) பீம்

இ) அர்ஜுன்–பி (பிரைம்)

ஈ) பாரத்

✓ பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம் அணுவாயுதங்களை சுமந்துசெல்லும் திறன்கொண்ட கண்டம்விட்டு கண்டம்பாயும் புதிய தலைமுறை அக்னி பி ஏவுகணை, ஒடிஸா மாநிலத்தின் பலாசோர் அருகேயுள்ள டாக்டர் APJ அப்துல் கலாம் தீவிலிருந்து வெற்றிகரமாக சோதனை செய்யப்பட்டது.

✓ அக்னி இரக ஏவுகணைகளில் புதிய தலைமுறை மேம்பட்ட வகையாக அக்னி பி ஏவுகணை விளங்குகிறது. 1000 முதல் 2000 கிமீ தூரம்வரை பயணிக்கும் திறனை இந்த ஏவுகணை பெற்றுள்ளது.

---

**9. ஆத்மநிர்பார் பாரத் ரோஜ்கார் யோஜனாவை செயல்படுத்துகிற நடுவண் அமைச்சகம் எது?**

அ) ஊரக வளர்ச்சி அமைச்சகம்

ஆ) வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகம்

**இ) பணியாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகம் ☑**

ஈ) உழவு அமைச்சகம்

- ✓ COVID–19 தொற்றுகாலத்தின்போது சமூக பாதுகாப்பு சலுகைகளுடன் புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்குதற்கு பணி வழங்குநர்களை ஊக்குவிப்பதற்காக ஆத்மநிர்பார் பாரத் ரோஜ்கார் யோஜனா தொடங்கப்பட்டது. அது நடுவண் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகத்தால் செயல்படுத்தப்படுகிறது. ஆத்மநிர்பார் பாரத் ரோஜ்கார் திட்டத்தை, 2022 மார்ச்.31 வரை நீட்டிக்கப்படும் என்று நிதியமைச்சர் தனது அண்மைய தொகுப்பில் அறிவித்தார்.

---

**10.எதிர்வரும் 2022ஆம் ஆண்டில் இயக்கப்படவுள்ள, இந்தியாவின் முதல் உள்நாட்டு விமானந்தாங்கிக்கப்பலின் பெயர் என்ன?**

**அ) விக்ராந்த் ☑**



ஆ) ஆதித்யா

இ) படேல்

ஈ) தீரன்

- ✓ இந்திய கடற்படையின் முதல் உள்நாட்டு விமானந்தாங்கிக்கப்பல், வரும் 2022ஆம் ஆண்டில் சேவையில் ஈடுபடுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.
- ✓ மேலும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டவுடன் அக்கப்பல் INS விக்ராந்த் எனப் பெயரிடப்படும். இந்தக் கப்பல் கேரள கொச்சியின் கொச்சின் கப்பல்கட்டும் நிறுவனத்தால் கட்டப்பட்டு வருகிறது. ஆத்ம நிர்பார் பாரதத்திற்கு இந்த விமானந்தாங்கிக்கப்பல் ஓர் எடுத்துக்காட்டு என்று மத்திய பாதுகாப்பு அமைச்சர் கூறியுள்ளார்.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. இத்தாலிய கடற்படை கப்பலுடன் INS தபார் பயிற்சி**

இத்தாலிய கடற்படை கப்பலுடன் இணைந்து INS தபார் கப்பல் பயிற்சி மேற்கொண்டது. மத்திய தரைக்கடலில் நடைபெற்றுவரும் பயிற்சியில் கலந்துகொள்வதற்காக INS தபார் கப்பல், இத்தாலியின் நேபிள்ஸ் துறை முகத்துக்கு சென்றது. வான்பாதுகாப்பு நடைமுறைகள், கடலில் மீட்பு நடவடிக்கைகள், தகவல் தொடர்புப் பயிற்சிகள் முதலிய பல்வேறு கடல்சார் பயிற்சிகளில் இரு கப்பல்களும் ஈடுபட்டன.

இயங்குதளத்தை மேம்படுத்துவதற்கும், கடல்சார் அச்சுறுத்தல்களுக்கு எதிராக ஒருங்கிணைந்த நடவடிக்கைகளை வலுப்படுத்துவதற்கும் இப்பயிற்சி இருநாடுகளுக்கும் பயனளித்தது. கடற்படையின் வழக்கப்படி நடந்த 'நீராவி அணிவகுப்பு'டன் பயிற்சி நிறைவடைந்தது.

---

**1. தாய்மார்கள், இளம்பருவத்தினர் மற்றும் குழந்தைகளின் உடல் பருமனை தடுப்பதற்கான தேசிய மாநாட்டை நடத்திய நிறுவனம் எது?**

**அ) NITI ஆயோக் ☑**

ஆ) எய்ம்ஸ்

இ) உலக சுகாதார அமைப்பு

ஈ) யுனிசெஃப்

✓ தாய்மார்கள், இளம்பருவத்தினர் & குழந்தைகளின் உடல் பருமனை தடுப்பதற்கான தேசிய மாநாட்டை NITI ஆயோக் கூட்டியது. உடல் பருமனை ஓர் "அமைதியான தொற்று" என NITI ஆயோக் கூறுகிறது.

✓ செயல்பாடு மற்றும் நலமான வாழ்வுமுறையை மேம்படுத்துவதற்காக இளம்பருவத்தினரை இலக்காகக்கொண்ட பல்துறை அணுகுமுறை தேவை என NITI ஆயோக் கூறியது. உலகளாவிய வல்லுநர்கள் மற்றும் UNICEF, WHO மற்றும் WFP உள்ளிட்ட ஐநா அமைப்புகளின் பிரதிநிதிகள் இதில் பங்கேற்றனர்.

---

**2. SCM, AMRUT & PMAY (U) ஆகிய திட்டங்களை செயல்படுத்துகிற அமைச்சகம் எது?**

அ) நலவாழ்வு மற்றும் குடும்பநல அமைச்சகம்

**ஆ) வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகம் ☑**

இ) உழவு மற்றும் உழவர்நல அமைச்சகம்

ஈ) சட்டம் மற்றும் நீதித்துறை அமைச்சகம்

Ministry of Housing and Urban Affairs

✓ பொலிவுறு நகரங்கள் திட்டம், அம்ருத், பிரதமரின் வீட்டு வசதி திட்டம் ஆகிவற்றின் ஆறாவது ஆண்டு விழாவை, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகம் கொண்டாடியது. 2022ஆம் ஆண்டுக்குள் அனைவரும் வீட்டுவசதியை அடைய வேண்டும் என்ற நோக்கத்துடன் பிரதமரின் வீட்டு வசதி திட்டம் 2015 ஜூன்.25 அன்று தொடங்கப்பட்டது.

---

**3. பன்னாட்டு சூரிய ஆற்றல் கூட்டணி கட்டமைப்பின் ஒப்பந்தத்தை ஏற்புறுதி செய்த முதல் நாடு எது?**

**அ) டென்மார்க் ☑**

ஆ) பின்லாந்து

இ) பிஜி

ஈ) ஆஸ்திரேலியா

✓ பன்னாட்டு சூரிய ஆற்றல் கூட்டணி (ISA) என்பது நூற்றியிருபதுக்கும் மேற்பட்ட நாடுகளின் ஓர் அரசுகளுக்கிடையேயான கூட்டணியாகும். இந்தியாவால் தொடங்கப்பட்ட இந்தக் கூட்டணி குருகிராமை தலைமை இடமாகக்கொண்டுள்ளது. அண்மையில், டென்மார்க், பன்னாட்டு சூரிய ஆற்றல் கூட்டணி கட்டமைப்பு ஒப்பந்தத்திற்கு ஏற்புறுதி அளித்தது. இதன் மூலம், இவ்வாறு செய்த முதல் நாடு டென்மார்க் ஆனது.

---


**4. K417N திரிபு, SARS–CoV–2 வைரஸின் எந்த வகைப்பாட்டுடன் தொடர்புடையது?**

அ) ஆல்பா

ஆ) பீட்டா

இ) டெல்டா

**ஈ) டெல்டா பிளஸ் ☑**



✓ கடந்த 2020 அக்டோபரில், இந்திய அறிவியலாளர்கள், டெல்டா வகை வைரஸை அடையாளங்கண்டு உலகளாவிய தரவுத்தளத்தில் சமர்ப்பித்தனர். SARS–CoV–2 B.1.617 என்றும் அழைக்கப்படும் டெல்டா வகை, சுமார் 15–17 திரிபுகளைக் கொண்டுள்ளது. இந்த டெல்டா வகை (B.1.617) B1.617.1, B.1.617.2 மற்றும் B.1.617.3 ஆகிய மூன்று துணை வகைகளைக் கொண்டுள்ளது. அவற்றுள் B.1.617.2 (டெல்டா பிளஸ்) ஆனது கவலைகொள்ளத்தக்க மாறுபாடாக வகைப்படுத்தப்பட்டுள்ளது. டெல்டா பிளஸ் வகையில், 'K417N திரிபு' என்ற கூடுதல் திரிபும் உள்ளது.

---

**5. இந்தியாவில், 'இலாப நோக்கற்ற' மாதிரி மருத்துவமனை குறித்த ஆய்வறிக்கையை வெளியிட்ட நிறுவனம் எது?**

அ) ஐ.சி.எம்.ஆர்

**ஆ) NITI ஆயோக் ☑**

இ) எய்ம்ஸ்

ஈ) ஐ.எம்.ஏ.

✓ இலாபநோக்கற்ற மருத்துவமனை தொடர்பான துறையில் கொள்கைகளை வலுப்படுத்தவும், இதுபோன்ற நிறுவனங்கள்பற்றிய தகவல்களில் நிலவும் இடைவெளியைக் குறைக்கவும், லாப நோக்கற்ற மாதிரி மருத்துவமனை குறித்த விரிவான ஆய்வறிக்கையை NITI ஆயோக் வெளியிட்டது.

✓ இலாப நோக்கில்லாத மாதிரி மருத்துவமனைகளின் செயல்பாடுகளை இந்த ஆய்வறிக்கை எடுத்துரைக்கிறது. இதனை, தனியார் மருத்துவ மனைகள் மற்றும் மத்திய அரசின் சுகாதாரத் திட்டங்களுடன் ஒப்பீடும் செய்யப்பட்டுள்ளது. இலாப நோக்கற்ற மருத்துவமனைகளில் செயல்படுத்தப்படும் கட்டணக் குறைவு உத்திகள் பற்றி இந்த அறிக்கை விரிவாக விவாதிக்கிறது.

---

**6. நடப்பாண்டுக்கான (2021) உலக மொபைல் மாநாட்டை நடத்தும் நிறுவனம் எது?**

அ) IEEE

**ஆ) GSMA ☑**

இ) ITU

ஈ) OMA

✓ உலகின் மிகப்பெரிய, புதிய மொபைல்கள் வெளியீட்டு நிகழ்வான உலக மொபைல் மாநாடு, ஜூன்.28 அன்று ஸ்பெயினில் உள்ள பார்சிலோனா நகரத்தில் தொடங்கியது. கடந்த ஆண்டு, COVID–19 தொற்று காரணமாக இந்நிகழ்வு இரத்து செய்யப்பட்டிருந்தது. கூகிள், நோக்கியா, ஷாவ்மி, பேஸ்புக் மற்றும் சோனி போன்ற முன்னணி நிறுவனங்கள் இந்த ஆண்டின் நேரடி நிகழ்வில் கலந்துகொள்ளவில்லை.

✓ பார்சிலோனாவில் GSMAஆல் ஆண்டுதோறும் நடத்தப்படும் இந்நிகழ்வு, தொலைத்தொடர்புத்துறையின் புதுமைகளை காட்சிப்படுத்துகிறது.

---

**7. இனநீதி & சமத்துவமின்மை குறித்த உலகளாவிய அறிக்கையை வெளியிட்ட நிறுவனம் எது?**

அ) உலக வங்கி

**ஆ) UNHRC ☑**

இ) பன்னாட்டுச் செலவாணி நிதியம்

ஈ) யுனிசெஃப்

✓ இனநீதி மற்றும் சமத்துவமின்மை குறித்த அறிக்கையை ஐநா மனித உரிமைகள் ஆணையத்தின் தலைவர் வெளியிட்டு, ஐநா மனித உரிமைகள் பேரவையில் சமர்ப்பித்தார்.

✓ இவ்வறிக்கையின்படி, ஆப்பிரிக்க வம்சாவளியைச் சேர்ந்தவர்களுக்கு எதிரான இனவெறி, இன்னும் உலகின் பல்வேறு பகுதிகளிலும் இருந்து வருகிறது. உலகளவில் ஆப்பிரிக்கர்கள் & ஆப்பிரிக்க வம்சாவளியைச் சேர்ந்த 190 பேரின் இறப்புகள் குறித்த தகவல்கள் சட்ட அமலாக்க அதிகாரிகளின் கைகளில் இருப்பதாக இந்த அறிக்கை கூறுகிறது.

---

**8. நடப்பாண்டின் (2021) போதைப்பொருள் பயன்பாடு மற்றும் சட்ட விரோதமான போதைப்பொருள் கடத்தலுக்கு எதிரான சர்வதேச நாளுக்கான கருப்பொருள் என்ன?**

**அ) Share Facts on Drugs, Save Lives ☑**

ஆ) Better Knowledge for Better Care

இ) Justice for Health

ஈ) Listen First




✓ போதைப்பொருள் பயன்பாடு மற்றும் சட்டத்துக்குப்புறம்பான போதைப் பொருள் கடத்தலுக்கு எதிரான சர்வதேச நாளானது ஜூன்.26 அன்று அனுசரிக்கப்படுகிறது. போதைப்பொருள் பயன்பாடற்ற ஒரு நிலையான உலகினை அடைவதற்கான ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்காக, உலகம் முழுவதும் இந்நாள் அனுசரிக்கப்படுகிறது.

✓ "Share Facts on Drugs, Save Lives" என்பது நடப்பாண்டில் (2021) வந்த இந்த நாளுக்கான கருப்பொருளாகும்.

---

**9. சமீப செய்திகளில் இடம்பெற்ற, 'சாம்பல் பட்டியல்' என்பதுடன் தொடர்புடைய நிறுவனம் எது?**

அ) WHO

**ஆ) FATF ☑**

இ) பன்னாட்டுச் செலவாணி நிதியம்

ஈ) உலக வங்கி

✓ பாரிஸைச் சார்ந்த நிதி செயற்பாட்டு பணிக்குழு (FATF) என்பது பண மோசடி மற்றும் பயங்கரவாத அமைப்புகளுக்கு செல்லும் நிதியுதவிகளை கண்காணிக்கும் உலகளாவிய அமைப்பாகும்.

✓ FATF, ஒரு நாட்டை 'சாம்பல் பட்டியலில்' வைக்கின்றது எனில், அந்நாடு அதிகப்படியான கண்காணிப்புக்கு உள்ளாகிறது என்பது பொருளாகும். சமீபத்தில், மால்டா, ஹைத்தி, பிலிப்பைன்ஸ் மற்றும் தெற்கு சூடான் மற்றும் பாகிஸ்தான் ஆகியவற்றை அதன் சாம்பல் நாடுகளின் பட்டியலில் FATF சேர்த்தது. கானாவை பட்டியலில் இருந்து FATF நீக்கியுள்ளது.

---

**10 சமீபத்தில் இந்தியாவுக்காக தங்கப்பதக்கம் வென்ற அபிஷேக் வர்மாவுடன் தொடர்புடைய விளையாட்டு எது?**



அ) பூப்பந்து

ஆ) துப்பாக்கிச்சுடுதல்

**இ) வில்வித்தை ☑**

ஈ) குத்துச்சண்டை

✓ தனிநபர் 'காம்பவுண்ட்' பிரிவு வில்வித்தை போட்டியில் இரண்டு உலகக் கோப்பை தங்கப்பதக்கங்களை வென்ற முதல் நபர் என்ற வரலாற்று சாதனையை அபிஷேக் வர்மா உருவாக்கியுள்ளார். அவர் அண்மையில், பாரிஸில் நடைபெற்ற வில்வித்தை உலகக்கோப்பை 'நிலை–3'இல் ஆண்கள் தனிநபர் கலப்புப் போட்டியில் தங்கம் வென்றார். முன்பு, 2015' இல் வுரோக்லாவில் நடந்த தனிநபர் நிகழ்வில் தங்கம் வென்றிருந்தார்.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. ஐந்து விளையாட்டு வீரர்களுக்கு தலா ₹5 இலட்சம் ஊக்கத்தொகை: அமைச்சர் மெய்யநாதன் வழங்கினார்**

ஒலிம்பிக் போட்டிகளில் பங்கேற்கவுள்ள 5 விளையாட்டு வீரர்களுக்கு தலா ₹5 இலட்சத்தை விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் சிவ வீ மெய்யநாதன் அளித்தார்.

ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்கவுள்ள தடகள விளையாட்டு வீரர்கள் ஆரோக்கிய ராஜீவ், நாகநாதன் பாண்டி, சுபா வெங்கடேசன், தனலட்சுமி சேகர், ரேவதி வீரமணி ஆகிய 5 வீரர்களுக்கு தலா ₹5 இலட்சத்துக்கான காசோலைகளை அவர்களது உறவினர்கள் பெற்றுக்கொண்டனர்.

ஒலிம்பிக் போட்டிகளில் கலந்துகொள்ளவுள்ள தமிழ்நாட்டைச் சேர்ந்த 7 வீரர்களுக்கு தலா ₹5 இலட்சத்தை முதலமைச்சர் ஏற்கனவே வழங்கி உள்ளார். அவர்களுடன் இப்போது கூடுதலாக 5 வீரர்களுக்கு ஊக்கத் தொகை அளிக்கப்பட்டுள்ளது.

---

**2. அரியலூர் மாளிகைமேடு அகழாய்வில் கூடுதல் சுவர் கண்டுபிடிப்பு**

அரியலூர் மாவட்டம், கங்கைகொண்டசோழபுரம் அடுத்த மாளிகை மேட்டில் நடைபெற்றுவரும் அகழ்வாராய்ச்சிப் பணியில், மாளிகையின் கூடுதல் சுவர் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் கீழடி, ஆதிச்சநல்லூர், கங்கைகொண்ட சோழபுரம் உள்பட 7 இடங்களில் அகழாய்வுப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதில், அரியலூர் மாவட்டம் கங்கைகொண்டசோழபுரம் அருகேயுள்ள மாளிகை மேடு பகுதியில் கடந்த மார்ச்சில் முதற்கட்ட ஆய்வுப்பணிகள் நடைபெற்று, அகழாய்வுப் பணிகள் தொடங்கி நடைபெற்று வருகின்றன.

இந்த ஆய்வில் பானை ஓடுகள், கூரை ஓடுகள், ஆணி வகைகள், செப்புக் காசு, மாளிகையின் சுவர், காப்பர் உள்ளிட்டவை கண்டெடுக்கப்பட்டன. இதனிடையே, கரோனா இரண்டாம் அலை காரணமாக கடந்த மாதம் 10 ஆம் தேதி முதல் அகழாய்வுப்பணிகள் நிறுத்தப்பட்டன. ஜூன்.15'க்குப் பிறகு பொதுமுடக்கத்தில் தளர்வுகளை அரசு அறிவித்ததையடுத்து அகழாய்வுப்பணிகள் மீண்டும் தொடங்கின. மாளிகை மேட்டில் உள்ள மாளிகையின் சுவர் கண்டறியப்பட்ட நிலையில், தற்போது மேலும் கூடுதல் சுவர் கண்டறியப்பட்டுள்ளன.

இதுகுறித்து தொல்லியல் துறை அலுவலர்கள் கூறுகையில், இப்பகுதியில் புதைந்துள்ள மாளிகையின் சுவர்கள் தற்போது கண்டறியப்பட்டு வருகின்றன. இங்கு கண்டறியப்படும் ஆணி, ஓடுகள் உள்ளிட்ட பொருள்கள் 1,000 ஆண்டுகள் பழைமை வாய்ந்ததாகும். தற்போது கண்டறியப்பட்டுள்ள வடிகால் போன்ற சுவர் முழு ஆய்வுக்கு பிறகே எவ்வகையான சுவர் எனத் தெரியவரும். மேலும், முழுமையாக தெரியும் வகையில் பாதுகாப்புடன் பள்ளம் தோண்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன. வரலாற்றுச் சிறப்புமிக்க பொருள்கள் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது என்றனர்.

---

**1. மத்திய நிதி அமைச்சகத்தின் அறிவிப்பின்படி, COVID சிகிச்சை செலவினங்களுக்கு, பிறிதொரு நபரிடமிருந்து எவ்வளவுவரை நிதி பெறப்பட்டால், அதற்கு வரி விலக்கு அளிக்கப்படுகிறது?**

அ) ₹1 இலட்சம்



ஆ) ₹5 இலட்சம்

**இ) ₹10 இலட்சம் ☑**

ஈ) ₹25 இலட்சம்

✓ நிதி அமைச்சகத்தின் சமீபத்திய அறிவிப்பின்படி, பணி வழங்குநர்கள் (அ) வேறு நபர்களால் மேற்கொள்ளப்படுகிற ஊழியரின் COVID சிகிச்சையில் ஏற்படும் செலவினங்களுக்கான வரிக்கு விலக்களிக்கப்படுகிறது. இந்த விலக்கு, பணிவழங்குநர் செலுத்தும் யாதொரு தொகைக்கும் பொருந்தும். மேலும், பிறிதொரு நபரிடமிருந்தும் நிதி பெறப்பட்டால், அதற்கான வரையறை ₹10 இலட்சமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

✓ இது, 2019–20 நிதியாண்டு மற்றும் அதனைத் தொடர்ந்த ஆண்டுகளில் மேற்கொள்ளப்படும் COVID சிகிச்சைகளையும் உள்ளடக்கியதாகும்.

---

**2. அதிநவீன பினாகா ஏவுகணை மற்றும் காலிபர் ஏவுகணைகளை பரிசோதனை செய்கின்ற அமைப்பு எது?**

அ) எச்.ஏ.எல்



**ஆ) டிஆர்டிஓ ☑**

இ) இஸ்ரோ

ஈ) எல் அண்ட் டி

✓ உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட 122 எம்எம் காலிபெர் ராக்கெட் மற்றும் மேம்படுத்தப்பட்ட பினாகா ராக்கெட் ஆகியவற்றை ஒடிசா கடற்கரைக்கு அருகில் சந்திப்பூரில் உள்ள ஒருங்கிணைந்த பரிசோதனை தளத்தில் அமைந்துள்ள பல்முனை ராக்கெட் ஏவும் வசதியில் இருந்து டிஆர்டிஓ என்றழைக்கப்படும் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம் வெற்றிகரமாக சோதனை செய்தது.

---

**3. '*Hylocereusundatus*' என அறிவியல் பூர்வமாக குறிப்பிடப்படுகிற பழம் எது?**

**அ) டிராகன் பழம் ☑**



ஆ) ஆரஞ்சு

இ) சீதாப்பழம்

ஈ) தர்பூசணி

✓ அறிவியல் பூர்வமாக '*Hylocereusundatus*' என்று குறிப்பிடப்படும் டிராகன் பழம், தாமரை மலர் போன்று இருப்பதால் இந்தியாவில் 'கமலம்' என்று அழைக்கப்படுகிறது. வணிகம் மற்றும் தொழிற்துறை அமைச்சகத்தின் அண்மைய அறிவிப்பின்படி, மகாராஷ்டிர மாநிலத்தின் சாங்லி மாவட்ட உழவர்களிடமிருந்து பெறப்பட்ட டிராகன் பழத்தின் முதல் சரக்குகளை, இந்தியா, துபாய்க்கு ஏற்றுமதி செய்தது.

---

**4. சமீபத்தில், உலக நலவாழ்வு அமைப்பால் மலேரியா இல்லாததாக அறிவிக்கப்பட்ட ஆசிய நாடு எது?**

அ) வங்கதேசம்



**ஆ) சீனா ☑**

இ) தாய்லாந்து

ஈ) நேபாளம்

✓ உலக நலவாழ்வு அமைப்பானது சீனாவுக்கு, 'மலேரியா இல்லாத' நாடு என அதிகாரப்பூர்வமாக சான்றிதழ் அளித்துள்ளது. 2016ஆம் ஆண்டில் இலங்கைக்கு இத்தகைய சான்றிதழ் அளிக்கப்பட்ட பிறகு, ஆசிய பசிபிக் பிராந்தியத்தில் இச்சான்றிதழைப்பெற்ற இரண்டாவது நாடு இதுவாகும். கடந்த 1940'களில், சீனா, 30 மில்லியன் பாதிப்புகளையும் ஆண்டுக்கு 300,000 இறப்புகளையும் கொண்டிருந்தது.

---

**5. சௌதி அரேபியாவின் மிகப்பெரிய வானூர்தி நிறுவனம் எது?**

அ) எமிரேட்ஸ் ஏர்லைன்ஸ்



ஆ) எட்டிஹாட் ஏர்வேஸ்

**இ) சௌதி அரேபிய ஏர்லைன்ஸ் ☑**

ஈ) குவாண்டாஸ் ஏர்லைன்ஸ்

✓ அரசுக்கு சொந்தமான சௌதி அரேபிய ஏர்லைன்ஸ் நிறுவனம் சௌதி அரேபியாவின் மிகப்பெரிய வானூர்தி நிறுவனமாகும். சமீபத்தில், சௌதி அரேபியா 2ஆவது தேசிய வானூர்தி சேவையை தொடங்குவதற்கான திட்டங்களை அறிவித்தது. அது வானூர்தி போக்குவரத்தைப் பொறுத்த மட்டில் சௌதி அரேபியாவை உலக அளவில் ஐந்தாவது மிகப்பெரிய வானூர்தி சேவை நாடாக மாற்றும்.

---

**6. இந்தியாவில் அவசரகால பயன்பாட்டு உரிமத்தைப் பெறும் முதல் mRNA தடுப்பூசி எது?**

அ) ஸ்புட்னிக்




ஆ) சினோவாக்

**இ) மாடர்னா mRNA 1273 ☑**

ஈ) பைசர் தடுப்பூசி

✓ இந்தியா தனது நான்காவது COVID–19 தடுப்பூசிக்கு ஒப்புதல் அளித்தது. அது முதல் மற்றும் மாடர்னாவின் mRNA–1273 தடுப்பூசியாகும். அது, அமெரிக்காவில், 'ஸ்பைகேவாக்ஸ்' என்ற பெயரில் விற்கப்படுகிறது. தற்போது மருத்துவ ஆய்வுக்கு உட்படுத்தாமல் இந்தத் தடுப்பூசிகளை இந்தியாவுக்கு இறக்குமதி செய்யலாம். 94.1 சதவிகித செயல்திறனைக் கொண்ட மாடர்னா தடுப்பூசி, இந்திய மருந்து நிறுவனமான சிப்லாமூலம் இந்தியாவில் விநியோகிக்கப்படுகிறது.

---

**7. பனை கச்சா மீதான எந்த வரி, அண்மையில், பத்து சதவீதமாகக் குறைக்கப்பட்டது?**

அ) கலால் வரி



**ஆ) சுங்க வரி ☑**

இ) சரக்கு மற்றும் சேவை வரி

ஈ) மேற்கூறிய எதுவும் இல்லை

✓ மத்திய மறைமுக வரிகள் மற்றும் சுங்க வாரியத்தின் (CBIC) சமீபத்திய அறிவிப்பின்படி, கச்சா பனையெண்ணெய்மீதான அடிப்படை சுங்க வரி 10 சதவீதமாகவும், சுத்திகரிக்கப்பட்ட பனையெண்ணெய்மீதான அடிப்படை சுங்க வரி 37.5 சதவீதமாகவும் குறைக்கப்பட்டுள்ளது.

✓ இவ்வரி குறைப்பு சோயா எண்ணெய் & சூரியகாந்தி எண்ணெயைவிட பனையெண்ணெயின் நுகர்வை அதிகமாக மாற்றக்கூடும். அது இறக்குமதியை அதிகரிக்கும் மற்றும் சமையல் எண்ணெய் விலையை குறைக்கும். இந்த குறைந்த வரி விகிதம் ஜூன்.30 முதல் செப்டம்பர்.30 வரை பொருந்தும்.

---

**8. COVID நோயாளிகளுக்கு சிகிச்சையளிக்க பயன்படும் DRDO'இன் 2–DG மருந்தைத் தயாரிக்கும் மருந்து நிறுவனம் எது?**

**அ) டாக்டர் ரெட்டிஸ் ☑**

Dr.Reddy's

ஆ) சன் பார்மா

இ) சீரம் நிறுவனம்

ஈ) பாரத் பயோடெக்

✓ 2–டியோக்ஸி–டி–குளுக்கோஸ் (2–DG) மருந்தினை டாக்டர் ரெட்டியின் நிறுவனத்துடன் இணைந்து பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பின் (DRDO) ஆய்வகமான அணு மருத்துவம் மற்றும் அதனுடன் தொடர்புடைய அறிவியல் நிறுவனம் உருவாக்கியது. டாக்டர் ரெட்டியின் ஆய்வகங்கள் வணிகரீதியாக 2–DG மருந்தை அறிமுகப்படுத்தியுள்ளது. அது COVID நோயாளிகளின் சிகிச்சைக்கு பயன்படுத்தப்படும் வாய்வழி மருந்தாகும்.

---

**9.** **பர்மிய திராட்சை, சிவப்பரிசி மற்றும் எலுமிச்சை ஆகியவற்றை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்த இந்திய மாநில அரசு எது?**



அ) மேற்கு வங்கம்

ஆ) பீகார்

**இ) அஸ்ஸாம் ☑**

ஈ) அருணாச்சல பிரதேசம்

✓ அஸ்ஸாமி மொழியில் 'லெட்டெகு' என்று குறிப்பிடப்படும் புதிய பர்மிய திராட்சைகள் சமீபத்தில் கௌகாத்தியிலிருந்து வான்வழியாக துபாய்க்கு ஏற்றுமதிசெய்யப்பட்டது. வைட்டமின் சி மற்றும் இரும்புச்சத்து நிறைந்த இப்பழங்களை ஏற்றுமதி செய்வதற்கு APEDA உதவி செய்தது.

✓ சமீபத்தில், அமெரிக்காவிற்கு 'சிவப்பரிசி' மற்றும் புவிசார் குறியீடு பெற்ற அஸ்ஸாம் எலுமிச்சை ஆகியவற்றை இலண்டனுக்கு ஏற்றுமதி செய்ய APEDA உதவியது.

---

**10.** **2021ஆம் ஆண்டுக்கான ஜப்பானின புகுயோகா பரிசைவென்ற இந்தியர் யார்?**



அ) அமர்த்தியா சென்

**ஆ) P சாய்நாத் ☑**

இ) உர்ஜித் படேல்

ஈ) இரகுராம் இராஜன்

✓ மூத்த இதழியலாளர் P சாய்நாத், 2021ஆம் ஆண்டுக்கான ஜப்பானின் புகுயோகா பரிசைப்பெற்ற மூவருள் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். கிராமப்புற இந்தியா குறித்த படைப்புகள் மற்றும் வர்ணனைகள்மூலம் அறிவைப்பரப்புவது மற்றும் உள்நாட்டு ஒத்துழைப்பை மேம்படுத்துவது ஆகியவற்றுக்காக, சாய்நாத், புக்குயோகா பரிசை வென்றுள்ளார். இதுவரை, 11 இந்தியர்கள் புகுயோகா பரிசைப் பெற்றுள்ளனர்.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. கொலோன் பல்கலைக்கு நிதி: முதல்வருக்கு அயல்நாட்டினர் நன்றி**

ஜெர்மனியின் கொலோன் பல்கலைக்கழக தமிழ்த்துறைக்கு நிதி வழங்கிய முதலமைச்சர் முக ஸ்டாலினுக்கு பல்வேறு தரப்பினரும் நன்றி தெரிவித்துள்ளனர். இதுகுறித்து, தமிழ்நாடு அரசு வெளியிட்ட செய்தி: ஜெர்மனியில் உள்ள கொலோன் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறை தொடர்ந்து இயங்கிட ₹1.25 கோடி நிதியை வழங்கிட முதல்வர் மு க ஸ்டாலின் உத்தரவிட்டார். தமிழ்மொழியின் தொடர் பயன்பாட்டுக்கும், முன்னேற்றத்துக்கும் வலுசேர்த்து பல சர்வதேச பல்கலைக்கழகங்களில் தமிழ் இடம்பெறும் வகையில் இந் நிதியுதவி அமைந்துள்ளது.

---

**2. உலக அளவில் பட்டினியால் நிமிடத்துக்கு 11 பேர் உயிரிழப்பு; உணவுப் பஞ்சம் 6 மடங்கு அதிகரிப்பு: ஆக்ஸ்ஃபாம் ஆய்வில் தகவல்**

உலக அளவில் பட்டினியில் நிமிடத்துக்கு 11 பேர் உயிரிழக்கிறார்கள். உணவுப்பஞ்சம் உள்ளிட்ட சூழல் உலக அளவில் கடந்த ஆண்டைவிட ஆறு மடங்கு அதிகரித்துள்ளது என்று வறுமைக்கு எதிரான அமைப்பான ஆக்ஸ்ஃபாம் நடத்திய ஆய்வில் தெரியவந்துள்ளது.

வறுமைக்கு எதிரான அமைப்பான ஆக்ஸ்ஃபாம், உலகளவில் கரோனா காலத்தில் பட்டினி குறித்து 'பல்கிப்பெருகிய பட்டினி வைரஸ்' என்ற தலைப்பில் ஆய்வு நடத்தியது.

அந்த ஆய்வறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது: "கரோனாவால் ஏற்பட்ட உணவுப்பஞ்சம் கடந்த ஆண்டோடு ஒப்பிடுகையில் ஆறுமடங்கு அதிகரித்துள்ளது. இந்த உணவுப் பஞ்சத்தால் மட்டும் உலக அளவில் நிமிடத்துக்கு ஏழு பேர் உயிரிழக்கின்றனர். பட்டினியால் உலக அளவில் நிமிடத்துக்கு 11 பேர் உயிரிழக்கின்றனர்.

உலக அளவில் கடந்த ஆண்டு பட்டினி, உணவுப் பாதுகாப்பின்மை, பஞ்சம் போன்ற காரணிகளால் 2 கோடிக்கும் அதிகமான மக்கள் பாதிக்கப்பட்டிருந்தனர். ஆனால், தற்போது அது உலக அளவில் 15.5 கோடியாக அதிகரித்துள்ளது. மக்கள் உலக அளவில் வறுமையையும், பட்டினியையும், பஞ்சத்தையும் எதிர்கொள்ள உலக நாடுகளுக்கு இடையே நடக்கும் போர் முக்கியக் காரணமாக இருக்கிறது.

பட்டினியுடன் போரிடுவதற்கு பதிலாக, உலக நாடுகள் தங்களுக்குள் போரிட்டு வருகின்றன. கோடிக்கணக்கான மக்கள் ஏற்கெனவே காலநிலையால் ஏற்படும் பேரழிவுகளாலும், பொருளாதார இடர்ப்பாடுகளாலும் பாதிக்கப்பட்டு வரும் நிலையில் பட்டினியும் சேர்ந்துள்ளது. உலக அளவில் ராணுவத்துக்குச் செலவிடும் தொகை 5,100 கோடி டாலர்களாக (ரூ.38 ஆயிரம் கோடி) அதிகரித்துள்ளது. உலக அளவில் பட்டினியால் வாடும் மக்களுக்கு உதவி வரும் ஐ.நா. செலவிடும் தொகையில் இது 6 மடங்காகும்.

ஆப்கானிஸ்தான், எத்தியோப்பியா, தெற்கு சூடான், சிரியா, ஏமன் ஆகிய நாடுகளில் பட்டினி மிகவும் மோசமான நிலையில் இருக்கிறது. போரில் பட்டினி ஓர் ஆயுதமாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. குடிமக்களுக்கு உணவு, தண்ணீர் உள்ளிட்ட அடிப்படை மனிதநேய உதவிகள் கூட மறுக்கப்படுகின்றன.

மக்கள் பாதுகாப்பாக வாழ முடியாது, உணவைத் தேட முடியாது. அதற்கு முன்பாகவே நாடுகள் சந்தைகளையும், உணவுச் சந்தைகளையும், கால்நடைகளையும் குறிவைத்து அழித்துவிடுகின்றன. தொடர்ந்து ஏற்பட்டு பேரழிவு தரக்கூடிய பட்டினியை நிறுத்த நாடுகளுக்கு இடையே நடக்கும் போரை நிறுத்த வேண்டும். போர் நடக்கும் பகுதியில் தொண்டு நிறுவனங்கள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மனிதநேய உதவி கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும். ஐ.நா.வின் பட்டினி போக்கும் முயற்சிக்கு உலக நாடுகள் உதவ வேண்டும்". இவ்வாறு ஆய்வு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

**3. 11.07.2021 – விடுதலைப் போராட்ட வீரர் 'மாவீரன்' அழகுமுத்துக்கோனின் 311ஆவது பிறந்தநாள்**

மாவீரன் அழகுமுத்துக்கோன் வாழ்க்கை குறிப்பு:

மாவீரன் அழகுமுத்துக்கோன், வெள்ளை ஏகாதிபத்தியத்திற்கு எதிரான விடுதலைப் போராட்டத்தில் வீரத்திலகமாய் விளங்கிய மாவீரர் ஆவார். மாவீரன் அழகுமுத்துக்கோன் 11.07.1710 அன்று தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி அருகேயுள்ள கட்டாலங்குளத்தில் பிறந்தார். இவரது தந்தை முத்துக்கோன், தாயார் பாக்கியத்தாய் அம்மாள் ஆவர்.

1755ஆம் ஆண்டு ஆங்கிலேயர்கள் நெல்லைச் சீமையிலுள்ள எல்லா பாளையக்காரர்களிடமும் நேரடியாக வரி வசூலிப்பதை விடுதலை உணர்வு நிரம்பப்பெற்ற வீரர் அழகுமுத்துக்கோன் எதிர்த்தார். எட்டப்ப மன்னர் வரிகட்ட மறுத்ததால், 1756–இல் மதுரை, நெல்லைச் சீமைக்கு ஆங்கிலேயர்களின் கமாண்டராக இருந்த கான்சாகிப்பின் பீரங்கிப்படை எட்டயபுரத்தைத் தாக்கியதைத் தொடர்ந்து எட்டயபுரம் ஆங்கிலேயர் வசமானது.

விடுதலை வீரர் அழகுமுத்துக்கோன் எட்டப்ப மன்னரைக் காப்பாற்றி அவரை பெருநாழிக்காட்டில் பாதுகாப்பாக வைத்திருந்தார். எட்டயபுரத்தை மீட்டெடுக்க விடுதலை வீரர் அழகுமுத்துக்கோன் மாவேலி ஓடை பெத்தநாயக்கனூர் பகுதியிலிருந்து வீரர்கள் அடங்கிய படையினைத் திரட்டி மன்னர் வெங்கடேஸ்வர எட்டப்பர், மாவீரன் அழகுமுத்துக்கோன் ஆகியோர் தலைமையில் இருபெரும் படைகள் இருவேறு திசையில் போர் தொடுக்கப் புறப்பட்டனர்.

மாவீரன் அழகுமுத்துக்கோன் படையினர் பெத்தநாயக்கனூர் கோட்டையில் இரவில் தங்கியிருந்ததை உளவறிந்த கான்சாகிப் படையினர் திடீர் தாக்குதலை நடத்தியதால், இத்தாக்குதலை எதிர்கொள்ள இயலாமல் வீரர்கள் இப்போரில் வீர மரணம் அடைந்தனர்.

மாவீரன் அழகுமுத்துக்கோன் மற்றும் 255 வீரர்களை நடுக்காட்டூர் சீமை என்ற இடத்திற்கு இழுத்துச்சென்று அவர்களில் 248 பேரின் வலது கரங்களை வெட்டி எறிந்த கொடுமையை நிகழ்த்தினார்கள் ஆங்கிலேயர்கள். மாவீரன் அழகுமுத்துக்கோன், கெச்சிலணன் சேர்வை, வெங்கடேசுரரெட்டு சேர்வை, முத்தழகு சேர்வை, பரிவாரம் முத்திருளன் இவரது தம்பி செகவீர ரெட்டுலட்சுமணன், தலைக்காட்டுபுரம் மயிலுப்பிள்ளை ஆகிய 7 பேரையும் பீரங்கி வாயில் கட்டி வைத்துச் சுட்டுத்தள்ளினார்கள்.

1759ஆம் ஆண்டு ஜூலை மாதம் இந்தக் கொடூரத்தை நிகழ்த்தினார்கள் வெள்ளையர்கள். சுதந்திரப் போராட்ட வீரர் மாவீரன் அழகுமுத்துக்கோன் அவர்களின் வீரத்தையும் வரலாற்றையும் உலகிற்கு எடுத்துரைக்கும் வகையில் தூத்துக்குடி மாவட்டம், கட்டாலங்குளத்தில் உள்ள அன்னாரது நினைவு மண்டபத்தில் ஆண்டுதோறும், அவரது பிறந்தநாள் விழா அரசு விழாவாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

---

**4. விம்பிள்டன் டென்னிஸ்: ஆஷ்லி பர்டி சாம்பியன்**

விம்பிள்டன் டென்னிஸ் போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவில் ஆஸி வீராங்கனை ஆஷ்லி பர்டி சாம்பியனானார். விம்பிள்டனில் இது அவரது முதல் பட்டமாகும். கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் இது அவரது 2ஆவது சாம்பியன் பட்டம். இதற்குமுன் 2019 பிரெஞ்சு ஓபனில் அவர் வாகை சூடியிருந்தார். லண்டனில் நடைபெற்ற இறுதிச்சுற்றில், உலகின் 13ஆம் நிலையில் உள்ள செக் குடியரசின் கரோலினா பிளிஸ்கோவாவை அவர் எதிர்கொண்டார்.

---

**5. விண்வெளி செல்லும் 3-ஆவது இந்திய வம்சாவளிப் பெண்**

அமெரிக்காவின் வா்ஜின் கலாக்டிக் நிறுவனத்தால் உருவாக்கப்பட்ட விண்வெளி ஓடத்தில் செல்லும் குழுவுக்கு இந்திய வம்சாவளியைச் சேர்ந்த ஸ்ரீஷா பண்ட்லா தேர்வு செய்யப்பட்டுள்ளார். இதுகுறித்து பிடிஐ செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளதாவது: அமெரிக்காவைச் சேர்ந்த தனியார் நிறுவனமான வர்ஜின் கலாக்டிக், மனிதர்களை ஏற்றிச் செல்லக்கூடிய 'ஸ்பேஸ்ஷிப்-2 யூனிட்டி' என்ற தனது விண்வெளி ஓடத்தை சோதனை முறையில் விண்வெளியில் செலுத்துகிறது.

அந்த ஓடத்தில் வர்ஜின் கலாக்டிக் நிறுவன உரிமையாளரான சர் ரிச்சர்ட் பிரான்ஸனுடன் 6 பேர் செல்கின்றனர். அவர்களில் ஒருவராக, இந்திய வம்சாவளியைச்சேர்ந்த ஸ்ரீஷா பண்டலா (34) தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

ஆந்திராவில் பிறந்த அவர், அமெரிக்காவின் டெக்ஸாஸ் மாகாணம், ஹூஸ்டனில் வளர்ந்தவர். ஸ்பேஸ்ஷிப்-2 யூனிட்டி சோதனை வெற்றிகரமாக நிறைவடையும்போது, விண்வெளிக்குச் சென்ற 3ஆவது பெண் வீராங்கனை என்ற பெருமையை ஸ்ரீஷா பெறுவார். ஏற்கெனவே, இந்திய வம்சாவளியைச் சேர்ந்த கல்பனா சாவ்லா, சுனிதா வில்லியம்ஸ் ஆகியோர் விண்வெளிக்குச் சென்று வந்துள்ளது நினைவுகூரத்தக்கது.

---

**5. கீழடி அகழாய்வில் தொட்டி போன்ற அமைப்பு கண்டுபிடிப்பு**

சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் அருகே கீழடியில் நடைபெற்று வரும் ஏழாம் கட்ட அகழாய்வில் சனி'க்கிழமை தொட்டி போன்ற அமைப்பு கண்டறியப்பட்டுள்ளது. கீழடி, அகரம், கொந்தகை, மணலூர் உள்ளிட்ட நான்கு இடங்களில் தமிழக தொல்லியல் துறை சார்பில் ஏழாம் கட்ட அகழாய்வு பணிகள் கடந்த பிப்ரவரி மாதம் 13ஆம் தேதி முதல் நடந்து வருகிறது. கீழடியில் கணேசன் என்பவரது நிலத்தில் இதுவரை ஏழு குழிகள் தோண்டப்பட்டு அவற்றில் சுடுமண் பகடை, கிண்ணம், மூடியுடன் கூடிய பானை, பானை ஓடுகள், உழவு கருவி உள்ளிட்ட பல்வேறு பொருட்கள் கண்டறியப்பட்டன.

கீழடியில் தோண்டப்பட்ட 6 ஆவது குழியில் சிறிய வேலைப்பாடுடன் கூடிய பானை ஒடு கண்டறியப்பட்டது. இது தற்போது முழுமையாக தோண்டப்பபட்ட நிலையில் உருளை வடிவிலான தொட்டி போன்ற அமைப்பு வெளியே காணப்பட்டது. 44 செ.மீ உயரமும், 77 செ.மீ அகலமும் கொண்ட இது சிறிய தொட்டியாக இருந்திருக்கலாம் என கருதப்படுகிறது. கீழடி உள்ளிட்ட நான்கு தளங்களில் நடைபெற்று வரும் அகழாய்வில் கீழடி தொழில் சார்ந்த நகரமாகவும், கொந்தகை பண்டைய கால மக்கள் இடுகாடாகவும் பயன்படுத்தியுள்ளனர். அகரம் சமையல் கூடமாக இருந்திருக்க வாய்ப்புண்டு, இதுவரை நடந்த அகழாய்வில் அதற்கான சான்றுகள் கிடைத்துள்ளது. கீழடியில் ஏற்கனவே நடந்த அகழாய்வில் நெசவு தொழிலில் பயன்படுத்தப்படும் தக்கழி, களிமண் குண்டு, நெசவு ஊசி உள்ளிட்டவைகள் கண்டறியப்பட்டன. தற்போது கிடைத்துள்ள தொட்டி போன்ற அமைப்பும் தொழிற்சாலையில் பயன்படுத்தியிருக்கலாம் என தொல்லியல் ஆய்வாளர்கள் தெரிவித்தனர்.

இனி வரும் நாட்களில் கீழடி அகழாய்வுத்தளத்தில் மேலும் கட்டடங்கள் போன்ற அமைப்புகள் வெளியே தெரிய வாய்ப்பிருப்பதாக நம்பப்படுகிறது.

---

**1. இந்தியாவின் மிகவும் ஒருங்கிணைந்த இரயில் திட்டம் என்று பெயரிடப்பட்ட எந்த நகரத்தின் புறநகர் இரயில் திட்டம், விரைவில் தொடங்கப்பட உள்ளது?**

அ) தில்லி

ஆ) கொல்கத்தா

இ) சென்னை

**ஈ) பெங்களூரு ☑**

✓ பெங்களூரு புறநகர் இரயில் திட்டமானது முதன்முதலில் கடந்த 1983ஆம் ஆண்டில் முன்மொழியப்பட்டது. இந்தத் திட்டம் விரைவில் தொடங்கப்பட இருப்பதாக அம்மாநில அரசு அறிவித்தது.

✓ இது, பெங்களூருவை அதன் துணை நகரங்கள், புறநகர்ப்பகுதிகள் மற்றும் சுற்றியுள்ள கிராமப் புறங்களுடன் ஒரு இரயில் அடிப்படையிலான விரைவுப் போக்குவரத்து அமைப்புமூலம் இணைக்கும். கர்நாடகாவின் இரயில் உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிறுவனம் இந்த திட்டத்துக்கான பொறுப்பில் உள்ளது. இது, ₹15,767 கோடி செலவில் 2026'க்குள் நிறைவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

---

**2. 'பழங்குடி மக்களின் உணவுமுறை' என்ற தலைப்பில் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ள அமைப்பு எது?**

**அ) உணவு மற்றும் உழவு அமைப்பு ☑**

ஆ) ஐக்கிய நாடுகள் அவை

இ) உலக உணவுத் திட்டம்

ஈ) ஐநா வளர்ச்சித் திட்டம்

✓ உணவு மற்றும் உழவு அமைப்பானது பயோவர்சிட்டி இன்டர்நேஷனல் கூட்டணி மற்றும் வெப்பமண்டல உழவுக்கான சர்வதேச மையம் (CIAT) ஆகியவற்றுடன் இணைந்து, பழங்குடி மக்களின் உணவு முறைமை பற்றிய புதிய அறிக்கையை வெளியிட்டது.

✓ உணவை நிலையான முறையில் உற்பத்தி செய்வதற்கும், பல்லுயிர் பெருக்கத்தை மேம்படுத்துவதற்குமாக உலகெங்குமுள்ள பழங்குடியின மக்கள் தாங்கள் சார்ந்துள்ள நூற்றுக்கணக்கான மாறுபட்ட தாவர மற்றும் விலங்கு இனங்களை இது அடையாளம் கண்டுள்ளது. இந்த உணவுமுறைகளுக்கு அச்சுறுத்தல்கள் அதிகரிப்பதாகவும் இவ்வறிக்கை எச்சரித்துள்ளது.

---

**3. இந்தியாவில் பட்டய கணக்காளர்கள் நாள் கொண்டாடப்படுகிற தேதி எது?**

**அ) ஜூலை.1 ☑**

ஆ) ஜூலை.2

இ) ஜூலை.3

ஈ) ஜூலை.4

✓ இந்திய பட்டய கணக்காளர் நிறுவனம் உருவாக்கப்பட்டதை நினைவு கூரும் வகையில் ஆண்டுதோறும் ஜூலை.1 ஆம் தேதி பட்டய கணக்காளர்கள் நாள் கொண்டாடப்படுகிறது. இந்திய பட்டய கணக்காளர் நிறுவனமானது கடந்த 1949ஆம் ஆண்டில் இந்திய நாடாளுமன்றத்தால் ஒரு சட்டத்தின்கீழ் நிறுவப்பட்டது.

---

**4. அண்மையில், இந்திய பட்டய கணக்காளர் நிறுவனத்தால் மாணவர்களுக்காக அறிமுகப்படுத்தப்பட்ட செயலியின்பெயரென்ன?**

**அ) ICAI–BOS ☑**

ஆ) ICAI–COS

இ) ICAI–DOS

ஈ) ICAI–FOS

✓ இந்திய பட்டய கணக்காளர் நிறுவனமானது துளிர்நிலை, இடைநிலை மற்றும் இறுதிநிலை மாணாக்கர்களுக்கான திறன்பேசி செயலியை அறிமுகப்படுத்தவுள்ளது. "ICAI–BOS" எனப் பெயரிடப்பட்ட இந்தச் செயலி, மாணாக்கருக்கு தரமான சேவைகளை மேம்படுத்துதற்கு புதுமையான வழிகளை வழங்கும்.

---

**5. 2019–2020ஆம் ஆண்டிற்கான UDISE+'ஐ அறிமுகப்படுத்திய மத்திய அமைச்சகம் எது?**

**அ) கல்வி அமைச்சகம் ☑**

ஆ) சுகாதார அமைச்சகம்

இ) உள்துறை அமைச்சகம்

ஈ) நிதி அமைச்சகம்

✓ கல்வி+ (UDISE+) 2019–20ஆம் ஆண்டுக்கான ஐக்கிய மாவட்ட தகவல் அமைப்பு குறித்த அறிக்கையை மத்திய கல்வியமைச்சர் இரமேஷ் பொக்ரியால் நிஷாங்க் வெளியிட்டார். இது நாட்டில் உள்ள பள்ளிக்கல்வி நிலவரத்தை தெரிவிக்கிறது.

---

**6. 149 ஆண்டுகள் பழமையான 'தர்பார் நகர்வு' நடைமுறையை சமீபத்தில் முடிவுக்குக் கொண்டுவந்த மாநிலம் / யூனியன் பிரதேசம் எது?**

**அ) ஜம்மு–காஷ்மீர் ☑**

ஆ) லடாக்

இ) உத்தரபிரதேசம்

ஈ) மத்திய பிரதேசம்




✓ ஜம்மு–காஷ்மீர் அரசு சமீபத்தில் 149 ஆண்டுகள் பழமையான 'தர்பார் நகர்வு' நடைமுறையை முடிவுக்குக் கொண்டுவந்தது. செயலகம் மற்றும் ஜம்மு–காஷ்மீரின் அனைத்து அரசு அலுவலகங்களும் ஒரு தலைநகரில் இருந்து மற்றோர் இடத்திற்கு மாற்றப்படுவதற்கு வழங்கப்படுகிற பெயர் 'தர்பார் நகர்வு' ஆகும்.

---

**7. Good–Neighborliness and Friendly Cooperation ஒப்பந்தம் என்பது எந்த இருநாடுகளுக்கிடையேயான ஒப்பந்தமாகும்?**

அ) இந்தியா–ரஷ்யா

**ஆ) சீனா–ரஷ்யா ☑**

இ) இந்தியா–ஆஸ்திரேலியா

ஈ) சீனா–ஆஸ்திரேலியா



✓ சீனா மற்றும் ரஷ்யாவின் தலைவர்கள் அதிகாரப்பூர்வமாக சீன–ரஷ்ய Good–Neighborliness and Friendly Cooperation ஒப்பந்தத்தை நீட்டிப்பதாக அறிவித்தனர். இது, கடந்த 2001ஆம் ஆண்டில் இருநாடுகளுக்கிடையில் கையெழுத்திடப்பட்ட நட்பு & ஒத்துழைப்பு தொடர்பான இருபதாண்டு கால இருதரப்பு ஒப்பந்தமாகும். அமெரிக்காவும் ஐரோப்பிய ஒன்றியமும் இருநாடுகளுக்கும் எதிராக மனிதவுரிமைகள் மற்றும் பிற பிரச்சனைகள் குறித்து அழுத்தம் கொடுத்துவருகின்றன.

---

**8. சமீபத்தில், உலகக்கோப்பையில் தங்கம் வென்ற ரகி சர்னோபத், எந்த விளையாட்டில் இந்தியாவைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறார்?**

அ) வில்வித்தை

**ஆ) துப்பாக்கிச்சுடுதல் ☑**

இ) குத்துச்சண்டை

ஈ) பளு தூக்குதல்



✓ குரோஷியாவின் ஒசிஜெக்கில் நடைபெற்ற துப்பாக்கிச்சுடுதல் உலகக் கோப்பையில் ரகி சர்னோபத் 25 மீ பிஸ்டல் பிரிவில் தங்கம்வென்றார். இந்த உலகக்கோப்பையில் இது இந்தியா பெறும் முதல் தங்கமாகும். ரகி சர்னோபத், துப்பாக்கிச்சுடுதலுக்கான அர்ஜுனா விருதையும் வென்றார்.

---

**9. டிஜிட்டல் கிரீன் பாஸ் என்பது எந்தக் கூட்டணி நாடுகளால் வழங்கப்படும் COVID சான்றிதழாகும்?**

அ) ASEAN

ஆ) BRICS

**இ) ஐரோப்பிய ஒன்றியம் ☑**

ஈ) BASIC




✓ டிஜிட்டல் கிரீன் பாஸ் என்பது ஐரோப்பிய ஒன்றியத்தின் டிஜிட்டல் COVID சான்றிதழாகும். இது, தடுப்பூசி போடப்பட்ட மக்களை ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கு பொது மற்றும் சுற்றுலா நோக்கங்களுக்காக சென்றுவர

அனுமதிக்கிறது. ஒரு நபர் COVID–19 தொற்றுநோய்க்கு எதிராக தடுப்பூசி போடப்பட்டதற்கான சான்றாக இது செயல்படுகிறது.

- ✓ இந்தியாவின் கோவிஷீல்டு ஐரோப்பிய மருந்துகள் நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்ட தடுப்பூசிகளின் பட்டியலில் இடம்பெறவில்லை. ஆதலால், கோவிஷீல்டு தடுப்பூசி போடப்பட்டவர்களுக்கு டிஜிட்டல் கிரீன் பாஸ் மறுக்கப்படுகிறது.

---

**10.** **லூசியானா டெல்டா அமைப்பு அமைந்துள்ள நாடு எது?**

அ) ஆஸ்திரேலியா

**ஆ) அமெரிக்கா ☑**

இ) பிரான்ஸ்

ஈ) ரஷ்யா



- ✓ NASA மற்றும் சில பல்கலைக்கழகங்களைச் சார்ந்த அறிவியலாளர்கள் லூசியானாவின் அருகிலுள்ள பகுதிகளில் $15 மில்லியன் டாலர் மதிப்பிலான, ஐந்தாண்டுகால ஆய்வை மேற்கொண்டு வருகின்றனர்.
- ✓ செயற்கைக்கோள் தரவுகளுடன் பயன்படுத்தக்கூடிய கணினிசார் மாதிரிகளை உருவாக்குவதை இக்குழு நோக்கமாகக் கொண்டுள்ளது. இது, உலகெங்கிலும் உள்ள நாடுகளுக்கு அவற்றின் டெல்டாக்களின் எந்தெந்தப் பகுதிகளை நவீனப்படுத்த முடியும் என்பதை அறிய உதவும்.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. 20 கிராண்ட்ஸ்லாம்: ஜோகோவிச்சும் இணைந்தார்; விம்பிள்டனில் சாம்பியனாகி சாதனை படைத்தார்**

விம்பிள்டன் டென்னிஸ் போட்டியில் ஆடவர் ஒற்றையர் பிரிவில் செர்பிய வீரர் நோவக் ஜோகோவிச் சாம்பியனானார். இது விம்பிள்டனில் அவரது ஆறாவது பட்டமாகும். ஒட்டுமொத்தமாக இது அவரது இருபதாவது கிராண்ட்ஸ்லாம் பட்டம். இதன்மூலம் ஓப்பன் எராவில் இருபது கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்ற 3ஆவது வீரர் என்ற பெருமையை ஜோகோவிச் பெற்றுள்ளார்.

முன்னதாக அத்தகைய சாதனையை முதல் வீரராக சுவிச்சர்லாந்தின் ரோஜர் பெடரர் 2018'இல் எட்ட, அதை ஸ்பெயினின் ரபேல் நடால் 2020'இல் எட்டி சமன் செய்தார். தற்போது அந்த 20 கிராண்ட்ஸ்லாம் வரிசையில் ஜோகோவிச்சும் இணைந்துள்ளார்.

நடப்பு சீசனில் ஜோகோவிச் ஆஸ்திரேலிய ஓப்பன், பிரெஞ்சு ஓப்பன், விம்பிள்டன் ஆகிய கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் சாம்பியனாகியுள்ளார். எதிர்வரும் அமெரிக்க ஓப்பனிலும் சாம்பியனாகும் பட்சத்தில் டான் பட்ஜ் (1938), ராட் லேவர் (1962, 1969) ஆகியோர் வரிசையில் காலண்டர் கிராண்ட்ஸ்லாம் வென்ற 3ஆவது வீரராக இணைவார். ஒருவேளை அதன்பிறகு டோக்கியோ ஒலிம்பிக்கிலும் அவர் சாம்பியனாகும் பட்சத்தில், அது 'கோல்டன் கிராண்ட்ஸ்லாம்' எனப்படும். அதைச்செய்தால், அத்தகைய சாதனை படைத்த முதல் வீரராக ஜோகோவிச் இருப்பார்.

**ஜூனியர் பிரிவு:**

இந்திய வம்சாவளி வீரர் சாம்பியன் விம்பிள்டன் டென்னிஸ் போட்டியில் ஆடவர் ஜூனியர் பிரிவில் இந்திய வம்சாவளி அமெரிக்கரான சமீர் பானர்ஜி சாம்பியனானார். இறுதிச்சுற்றில் அவர் சக அமெரிக்கரான விக்டர் லிலோவை 7–5, 6–3 என்ற செட்களில் வீழ்த்தினார்.

**குரோஷிய ஜோடிக்கு பட்டம்**

ஆடவர் இரட்டையர் பிரிவில் குரோஷியாவின் நிகோலா மெக்டிச் / மேட் பாவிச் இணை பட்டம் வென்றது. போட்டித்தரவரிசையில் முதலிடத்தில் இருந்த இந்த ஜோடி இறுதிச்சுற்றில், போட்டித்தரவரிசையில் நான்காம் இடத்திலிருந்த ஸ்பெயினின் மார்செல் கிரானோலர்ஸ் / ஹொராசியோ ஜெபாலோஸ் ஜோடியை 6–4, 7–6 (7/5), 2–6, 7/5 என்ற செட்களில் வென்றது.

---

**2. கோபா அமெரிக்கா: கோப்பை வென்றது ஆர்ஜென்டீனா**

கோபா அமெரிக்கா கால்பந்து போட்டியின் இறுதியாட்டத்தில் ஆர்ஜென்டீனா 1–0 என்ற கோல் கணக்கில், நடப்புச்சாம்பியனாக இருந்த பிரேஸிலை வீழ்த்தி புதிய சாம்பியனானது. இப்போட்டியில் ஆர்ஜென்டீனா 15ஆவது முறையாக சாம்பியன் ஆகியுள்ளது. எனினும், கடந்த 1993ஆம் ஆண்டுக்குப் பிறகு அந்த அணி கால்பந்து போட்டியில் வெல்லும் முதல் பட்டம் இதுவாகும். அந்த ஆண்டில் கோபா அமெரிக்கா மற்றும் இன்டர்கான்டினென்டல் கோப்பை ஆகிய போட்டிகளில் ஆர்ஜென்டீனா சாம்பியன் ஆகியிருந்தது.

---

**1. கங்கையாற்று வடிநிலத்தின் ஒருபகுதியாக இருக்கும் பனிப்பாறை ஏரிகளின் வரைபடத்தை புதுப்பித்துள்ள அமைச்சகம் எது?**



**அ) ஜல் சக்தி அமைச்சகம் ☑**

ஆ) சுற்றுச்சூழல் மற்றும் வனம் அமைச்சகம்

இ) உள்துறை அமைச்சகம்

ஈ) பாதுகாப்பு அமைச்சகம்

✓ கங்கையாற்று வடிநிலத்தின் ஒருபகுதியாக இருக்கும் பனிப்பாறை ஏரிகளின் புதுப்பிக்கப்பட்ட வரைபடத்தொகுப்பை நடுவண் ஜல் சக்தி அமைச்சகம் அண்மையில் வெளியிட்டது. இந்த வரைபடத்தொகுப்பை பொருத்தவரை, கங்கையாற்று வடிநிலத்தில் 4,707 பனிப்பாறை ஏரிகள் வரைபடமாக்கப்பட்டுள்ளன. அவை மொத்தம் 0.25 ஹெக்டேருக்கு மேல் பரவியுள்ளன. இதற்காக ரிசோர்ஸ்ஸாட்–2 பயன்படுத்தப்பட்டுள்ளது.

---

**2. 2021 ஜூலை.3 அன்று கொண்டாடப்பட்ட பன்னாட்டு கூட்டுறவு நாளுக்கான கருப்பொருள் என்ன?**

அ) Cooperatives for a Better World

ஆ) Cooperatives for Yesterday, Today and Tomorrow

இ) Cooperatives for Every Community

**ஈ) Rebuild Better Together ☑**

✓ பன்னாட்டு கூட்டுறவு நாளானது 2021 ஜூலை.3 அன்று "Rebuild Better Together" என்ற கருப்பொருளின்கீழ் கொண்டாடப்பட்டது. ஒவ்வோர் ஆண்டும் ஜூலை மாதத்தில் வரும் முதல் சனிக்கிழமையன்று இந்த நாள் கொண்டாடப்படுகிறது.

---

**3. சமீபத்தில் உத்தரகண்ட் மாநிலத்தின் 11ஆவது மற்றும் இளம் முதல்வருமான புஷ்கர் சிங் தாமி சார்ந்த தொகுதி எது?**



அ) சம்பாவத்

ஆ) சித்தர்கஞ்ச்

**இ) காதிமா ☑**

ஈ) கோட்வார்

✓ கடந்த 1975ஆம் ஆண்டில் பிறந்தவரான புஷ்கர் சிங் தாமி அண்மையில் உத்தரகண்ட் மாநிலத்தின் 11ஆவது மற்றும் இளம் முதல்வராக ஆனார். அவர் உத்தம் சிங் நகர் மாவட்டத்தில் உள்ள காதிமா தொகுதியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினராக உள்ளார்.

---

**4.BOLD திட்டம் (வறண்ட நிலங்களில் மூங்கில் சோலை) சமீபத்தில் இந்தியாவில் எந்த மாநிலத்திலிருந்து தொடங்கப்பட்டது?**



அ) குஜராத்

**ஆ) இராஜஸ்தான் ☑**

இ) ஹரியானா

ஈ) மத்திய பிரதேசம்

✓ இராஜஸ்தானில் பழங்குடியினர் வருவாய் மற்றும் மூங்கில்சார்ந்த பொருளாதாரத்தை ஊக்குவிக்க வறண்ட நிலத்தில் மூங்கில் சோலை திட்டம் என்ற தனித்துவமான திட்டத்தை காதி மற்றும் கிராமத்தொழில் ஆணையம் தொடங்கியுள்ளது.

✓ பாலைவனப்பகுதியை குறைக்கவும், வாழ்வாதாரத்தை அளிக்கவும், பல் நோக்கு ஊரக தொழில் உதவியை காதி மற்றும் கிராமத்தொழில் ஆணையம் தொடங்கியுள்ளது. இந்தத் திட்டத்துக்கு வறண்ட நிலத்தில் மூங்கில் சோலை (Bamboo Oasis on Lands in Drought (BOLD) எனப் பெயரிடப்பட்டுள்ளது. நாட்டில் முதன்முறையாக இத்திட்டம் ராஜஸ்தான் மாநிலம் உதய்பூர் மாவட்டத்தில் நிக்லாமண்டவா என்ற பழங்குடியின கிராமத்தில் தொடங்கப்பட்டுள்ளது.

✓ நாட்டின் 75ஆவது விடுதலை ஆண்டை கொண்டாட காதி கிராமத் தொழில் ஆணையம் நடத்தும் 'காதி மூங்கில் திருவிழா'வின் ஒரு பகுதியாக இந்த நடவடிக்கை தொடங்கப்பட்டுள்ளது. இதே திட்டத்தை குஜராத் ஆமதாபாத் மாவட்டத்திலுள்ள தோலேரா கிராமம் மற்றும் லே–லடாக் பகுதியிலும் காதி கிராமத் தொழில் ஆணையம் இந்தாண்டு ஆகஸ்டுக்குள் தொடங்கவுள்ளது. ஆக.21ஆம் தேதிக்கு முன்பாக மொத்தம் 15,000 மூங்கில் கன்றுகள் நடப்படும்.

**5. அண்மையில் பதவி நீட்டிப்பு அளிக்கப்பட்ட அமிதாப் காந்த், பின்வரும் எந்தப் பதவியை வகித்து வருகிறார்?**



அ) SBI தலைவர்

**ஆ) NITI ஆயோக் தலைமைச் செயல் அதிகாரி ☑**

இ) துணைத் தேர்தல் ஆணையர்

ஈ) தலைமைக் கணக்கு தணிக்கை அதிகாரி

✓ NITI ஆயோக்கின் தலைமைச் செயல் அதிகாரியாக (CEO) அமிதாப் காந்த், பணியாற்றிவருகிறார். பிரதமர் மோடி தலைமையிலான அமைச்சரவை நியமனக்குழு, அமிதாப் காந்தின் பதவிக்காலத்தை மேலும் ஓராண்டு காலத்திற்கு நீட்டித்துள்ளது. 2016ஆம் ஆண்டில், அவர், NITI ஆயோக்கில் சேர்ந்த பிறகு, அவர் பெறும் மூன்றாவது நீட்டிப்பு இதுவாகும்.

---

**6. உலகளாவிய இணையவெளிப் பாதுகாப்பு குறியீடு – 2020'இல் இந்தியா அடைந்துள்ள தரநிலை என்ன?**




அ) 35

ஆ) 25

இ) 16

**ஈ) 10 ☑**

✓ உலகளாவிய இணையவெளிப் பாதுகாப்பு குறியீடு – 2020'ஐ ஐநா'இன் சர்வதேச தொலைத்தொடர்பு ஒன்றியம் (ITU) அறிமுகப்படுத்தியுள்ளது. முதன்முறையாக பட்டியலின் முதல் பத்து இடங்களுக்குள் இந்தியா இடம்பெற்றுள்ளது.

✓ முதன்மை இணையவெளிப்பாதுகாப்பு அளவுருக்களில் உலகின் 10ஆம் சிறந்த நாடாக இடம்பெறுவதற்கு, இந்தியா, 37 இடங்கள் முன்னேறி வந்துள்ளது. இக்குறியீட்டில் அமெரிக்கா முதலிடத்திலும், இங்கிலாந்து (UK) மற்றும் சௌதி அரேபியா (UAE) ஆகியன இரண்டாவது இடத்திலும், எஸ்தோனியா மூன்றாவது இடத்திலும் உள்ளன.

---

**7. தேசிய விண்வெளிப் போக்குவரத்துக் கொள்கையை வெளியிட்ட துறை எது?**

**அ) விண்வெளித் துறை ☑**

ஆ) தகவல் தொழில்நுட்பத் துறை

இ) தகவல் தொடர்புத் துறை

ஈ) தளவாடங்கள் துறை

✓ இந்திய அரசின் விண்வெளித் துறையானது அண்மையில் வரைவு விண்வெளி போக்குவரத்துக் கொள்கையை கொண்டு வந்துள்ளது. விண்வெளி தொழில்நுட்பத்தில் தனியார் பங்களிப்பை ஊக்குவிக்கும் நோக்கில் இது உள்ளது. பசுமை எரிபொருள், ரோபோட்டிக் விண்வெளி ஆய்வு மற்றும் மீண்டும் பயன்படுத்தக்கூடிய ஏவுகலங்கள் ஆகியவற்றில் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுக்கு இந்தக்கொள்கை சிறப்பு முக்கியத்துவம் அளிக்கிறது.

---

**8. இந்தியாவில் GST வரிவிதிப்பு முறை செயல்படுத்தப்பட்ட தேதி எது?**




அ) 2019 ஜூன் 01

ஆ) 2018 ஜூலை 01

**இ) 2017 ஜூலை 01 ☑**

ஈ) 2018 ஆகஸ்ட் 15

✓ 2021 ஜூலை.1 – சரக்கு மற்றும் சேவை வரியின் (GST) 4ஆம் ஆண்டு நிறைவைக்குறிக்கிறது. கடந்த 2017 ஜூலை.1ஆம் தேதியன்று GST வரி விதிப்புமுறை செயல்படுத்தப்பட்டது. இத்தேதியை, நடுவணரசு, GST நாளாக அறிவித்துள்ளது. இந்த ஆண்டு (2021) GST நாளைக் குறிக்கும் வகையில், சரியான நேரத்தில் வரிதாக்கல்செய்த 54,000 GST வரி செலுத்துபவர்களுக்கு பாராட்டு சான்றிதழ்களை வழங்க நடுவண் நிதி அமைச்சகம் திட்டமிட்டுள்ளது.

---

**9.** **எந்த நாட்டின் கம்யூனிஸ்ட் கட்சி, அண்மையில் தனது 100ஆவது நிறுவன ஆண்டைக் கொண்டாடியது?**

அ) இந்தியா

***ஆ) சீனா ☑***

இ) ஜப்பான்

ஈ) தைவான்



- ✓ *சீனத்தின் கம்யூனிஸ்ட் கட்சியானது அண்மையில் தனது நூறாவது ஆண்டு நிறைவைக் கொண்டாடியது. அது சீன நாட்டின் தியனன்மென் சதுக்கத்தில் மிகப்பெரிய அளவில் கொண்டாடப்பட்டது. இந்த நிகழ்வைக் குறிக்கும் வகையில், வானை நோக்கி 100 குண்டுகள் முழங்கப்பட்டன. இந்நிகழ்ச்சியில் பேசிய சீன அதிபர் ஜி ஜின்பிங், நாட்டின் எழுச்சியை உறுதிசெய்யும் ஒரே ஆற்றல் கட்சி கம்யூனிஸ்ட் மட்டுமே என்று உரையாற்றினார்.*

---

**10.** **'COVID-19 மற்றும் சுற்றுலா' என்ற தலைப்பிலான அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ள பன்னாட்டு அமைப்பு எது?**

அ) IMF

**ஆ) UNCTAD ☑**

இ) WHO

ஈ) UNESCO

- ✓ ஐநா வர்த்தகம் மற்றும் மேம்பாட்டு அமைப்பானது (UNCTAD) சமீபத்தில் "COVID-19 மற்றும் சுற்றுலா" என்ற தலைப்பிலான ஓர் அறிக்கையை வெளியிட்டது. இந்த அறிக்கையின்படி, உலகின் சுற்றுலாத்துறையானது குறைந்தது $1.2 டிரில்லியன் டாலர்கள் அல்லது உலகின் மொத்த உள் நாட்டு உற்பத்தியில் 1.5% அளவுக்கு இழக்கக்கூடும்.
- ✓ பன்னாட்டளவிலான சுற்றுலாவின் இடைவெளி எட்டு மாதங்களுக்கும் மேல் நீடித்தால், இந்த இழப்பு, $2.2 டிரில்லியன் அமெரிக்க டாலர் அல்லது உலக மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 2.8%ஆக உயரக்கூடும்.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. கட்டாய ஹால்மார்க் திட்டம் அமல்: அதிக மாவட்டங்கள் பட்டியலில் தமிழ்நாடு முதலிடம்**

தங்க நகைகளின் தரத்தை நிர்ணயிக்கும் ஹால்மார்க் முத்திரையை கட்டாயமாக்கும் முதல்கட்டத் திட்டத்தில் தமிழ்நாடு, குஜராத், மகாராஷ்டிர மாநிலங்களைச் சேர்ந்த அதிக மாவட்டங்கள் இடம்பெற்றுள்ளன. கடந்த ஜூன்.16 முதல் தங்க நகைகளுக்கு ஹால்மார்க் முத்திரையிடுவதை மத்திய அரசு கட்டாயமாக்கியுள்ளது.

இதுதொடர்பாக நடுவண் அரசு வெளியிட்டுள்ள அறிவிப்பில், 'கட்டாய ஹால்மார்க் திட்டம்' 28 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் உள்ள 256 மாவட்டங்களில் முதல்கட்டமாக செயல்படுத்தப்படுகிறது. இதில் அதிகபட்சமாக தமிழ்நாட்டில் 24 மாவட்டங்களும், குஜராத்தில் 23 மாவட்டங்களும், மேற்கு வங்கம் மற்றும் உத்தர பிரதேசத்தில் 19 மாவட்டங்களும் இடம்பெற்றுள்ளன.

தில்லி, தெலங்கானா, ஆந்திர பிரதேசம், பஞ்சாப் ஆகிய மாநிலங்களில் தலா 12 மாவட்டங்களும், கேரளத்தில் 13 மாவட்டங்களும், கர்நாடகத்தில் பதினான்கு மாவட்டங்களும், ஹரியானாவில் 15 மாவட்டங்களும் தேர்வு செய்யப்பட்டுள்ளன. இந்த மாவட்டங்களில் 14, 18, 22 காரட் தங்க நகைகள் மட்டும் ஹால்மார்க் முத்திரையுடன் விற்பனை செய்யப்பட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய தரக் கட்டுப்பாட்டு அமைப்பு (BIS) 2000, ஏப்ரல் மாதம் முதல் தங்க நகைகளுக்கு ஹால்மார்க் முத்திரை வழங்கி வருகிறது. தற்போது சுமார் 40 சதவீத தங்க நகைகள் ஹால்மார்க் முத்திரையிடப்படுகின்றன. இந்தியாவில் சுமார் 4 லட்சம் தங்கநகை வியாபாரிகள் உள்ளனர். இதில் 35,879 பேர் மட்டுமே BIS தரச்சான்றிதழ் பெற்றுள்ளனர். ஆண்டுதோறும் 700-800 டன் தங்கத்தை இந்தியா இறக்குமதி செய்வதாக உலக தங்க கவுன்சில் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

---

**2. பிஎம்சி வங்கியை கையகப்படுத்தி 'ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க்' அமைக்க ஒப்புதல்: நீதிமன்றத்தில் ரிசர்வ் வங்கி தகவல்**

மோசடியில் சிக்கிய பஞ்சாப் மற்றும் மகாராஷ்டிரா கூட்டுறவு (பிஎம்சி) வங்கியை விரைவில் கையகப்படுத்தி 'ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க்' அமைக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக தில்லி உயர்நீதிமன்றத்தில் ரிசர்வ் வங்கி தெரிவித்துள்ளது. பிஎம்சி வங்கி தொடர்பான வழக்கு தில்லி உயர்நீதிமன்றத்தில் நீதிபதிகள் டி என் பாட்டீல், ஜோதி சிங் ஆகியோர் அடங்கிய அமர்வு முன்பு விசாரணைக்கு வந்தது.

---

**3. ₹9,695 கோடியில் நீர்மின்னுற்பத்தி திட்டம்: இந்தியாவுடன் நேபாளம் ஒப்பந்தம்**

நேபாளத்தில் 679 மெகாவாட் உற்பத்தித் திறனுடன் கூடிய நீர் மின் திட்டத்தை அமைத்துத் தருவதற்கான ₹9,695 கோடி ஒப்பந்தத்தை அந்நாடு இந்தியாவுடன் மேற்கொண்டுள்ளது. இது அந்த நாட்டுடன் இந்தியா மேற்கொள்ளும் இரண்டாவது மிகப்பெரிய திட்டமாகும்.

முன்னதாக, அந்த நாட்டில் 900 மெகாவாட் உற்பத்தித் திறனுடன் கூடிய அருண்-3 நீர்மின் திட்டத்தை அமைத்துத் தருவதற்கான ₹7,756 கோடி ஒப்பந்தத்தை இந்தியா மேற்கொண்டது. இப்போது, கிழக்கு நேபாளத்தில் சங்குவசபா மற்றும் போஜ்பூர் மாவட்டங்களுக்கு இடையே அமைந்துள்ள கீழ் அருண் நதியில் 679 மெகா வாட் நீர் மின் நிலையத்தை அமைத்துத் தருவதற்காக இந்தியாவின் சட்லஜ் ஜல் வித்யத் நிகாம் நிறுவனத்துடன் நேபாளம் புரிந்துணா்வு ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது.

இதன் திட்ட மதிப்பு ₹9,695 கோடியாகும். கடந்த 2017ஆம் ஆண்டு விலை நிலவரத்தின் அடிப்படையில் இந்தத் திட்ட மதிப்பு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

---

**1. ஆண்டுதோறும் தேசிய மருத்துவர்கள் நாள் அனுசரிக்கப்படுகிற தேதி எது?**

**அ) ஜூலை.01 ☑**




ஆ) ஜூலை.05

இ) ஜூலை.10

ஈ) ஜூலை.15

✓ ஆண்டுதோறும் ஜூலை.1 அன்று இந்திய மருத்துவ சங்கத்தால் இந்திய ஒன்றியத்தில் தேசிய மருத்துவர் நாள் அனுசரிக்கப்படுகிறது.

✓ வங்கதேசத்தின் முன்னாள் முதலமைச்சராக இருந்த மருத்துவர் பிதன் சந்திர ராயின் நினைவாக இந்த நாள் கொண்டாடப்படுகிறது. அவர் ஒரு மருத்துவராக பணியாற்றியதன்மூலம் மனிதகுலத்திற்கு மகத்தான பங்களிப்பை வழங்கியுள்ளார்.

---

**2. தேசிய சமூக வானொலி விருதுகளை நிறுவிய அமைச்சகம் எது?**

**அ) தகவல் மற்றும் ஒலிபரப்பு அமைச்சகம் ☑**



ஆ) எரிசக்தி அமைச்சகம்

இ) உள்துறை அமைச்சகம்

ஈ) பாதுகாப்பு அமைச்சகம்

✓ சமூக வானொலி நிலையங்கள் இடையே ஆரோக்கியமான போட்டியை ஊக்குவிப்பதற்காக தகவல் மற்றும் ஒலிபரப்பு அமைச்சகம் 2011–12ஆம் ஆண்டில் தேசிய சமூக வானொலி விருதுகளை நிறுவியது. நடப்பாண்டு (2021) விருதுகளில், சமுதாய வானொலி நிலையமான ரேடியோ விஷ்வாஸ் இரண்டு விருதுகளை வென்றது.

✓ நிலைத்தன்மை மாதிரி விருதுகள் பிரிவில் முதல் பரிசையும், மையக்கரு சார்ந்த விருதுகள் பிரிவில் 2ஆவது பரிசையும் COVID–19 காலத்தில் ஒலிபரப்பான 'அனைவருக்கும் கல்வி' என்னும் நிகழ்ச்சிக்காக ரேடியோ விஷ்வாஸ் 90.8 விருதுப்பெற்றது. ரிம்ஜிம் ரேடியோ 90.4 (பீகார்) – புதுமையான சமூக ஈடுபாடு என்னும் பிரிவில் முதல் பரிசை வென்றது. உள்ளூர் கலாச்சாரத்தை மேம்படுத்தியமைக்காக ரேடியோ குஞ்சன் (ஒடிஸா) முதல் பரிசை வென்றது. ரேடியோ மட்டோலி (கேரளா) – கருப் பொருள்சார் பிரிவில் முதல் பரிசை வென்றது.

---

**3. 'சீ பிரேக்கர்' என்ற பெயரில் தனித்தியங்கும் திறனுடன் நீண்ட தூரம் செல்லும் ஏவுகணை அமைப்பை ஏவிய நாடு எது?**

**அ) இஸ்ரேல் ☑**



ஆ) ஜப்பான்

இ) சீனா

ஈ) அமெரிக்கா

✓ இஸ்ரேலின் பாதுகாப்பு நிறுவனமான ரபேல் அதிநவீன பாதுகாப்பு அமைப்புகள், தனித்தியங்கும் திறனுடன் கூடிய நீண்ட தூரம் செல்லும் ஏவுகணை அமைப்பான சீ பிரேக்கரின் 5ஆம் தலைமுறை வடிவத்தை அறிமுகம் செய்துள்ளது. இது அதிக மதிப்புள்ள கடல்சார் மற்றும் நிலம் சார் இலக்குகளை தாக்கும். நிலம் மற்றும் கப்பலின் மேற்பரப்பிலிருந்து ஏவும் இதன் வீச்சு 300 கிமீ ஆக உள்ளது.

---

**4. 'இடையீட்டாளர் வழிகாட்டுதல்கள் மற்றும் டிஜிட்டல் மீடியா நெறிமுறைக் குறியீட்டை' அறிவித்த நாடு எது?**

அ) பிரான்ஸ்

ஆ) சீனா




**இ) இந்தியா ☑**

ஈ) ஆஸ்திரேலியா

✓ 'இடையீட்டாளர் வழிகாட்டுதல்கள் மற்றும் டிஜிட்டல் மீடியா நெறிமுறைக் குறியீட்டை' இந்தியா அறிவித்தது. அது, 2021.மே முதல் நடைமுறைக்கு வந்தது. அந்த விதிகளின்படி, அனைத்து குறிப்பிடத்தக்க சமூக ஊடக இடையீட்டாளர்களும் புகார்கள், எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் கண்காணிப்பு விவரங்கள் குறித்த மாதாந்திர அறிக்கைகளை வெளியிட வேண்டியிருந்தது. அண்மையில் பேஸ்புக், மே.15 முதல் ஜூன்.15 வரையிலான காலப்பகுதிக்குரிய தனது முதல் மாதாந்திர அறிக்கையை வெளியிட்டது. அந்த அறிக்கையின்படி, பேஸ்புக், சுமார் 30 மில்லியன் உள்ளடக்கங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்தது.

**5. விலை உயர்வைக் கட்டுப்படுத்துவதற்காக மொத்த விற்பனையாளர்கள், சில்லறை விற்பனையாளர்கள், ஆலை உரிமையாளர்கள் மற்றும் எந்தப் பொருளின் இறக்குமதியாளர்கள் மீது நடுவணரசு இருப்பு வைப்பதற்கான வரம்புகளை விதித்தது?**

அ) அரிசி



**ஆ) பருப்பு வகைகள் ☑**

இ) காய்கறிகள்

ஈ) கரும்பு

✓ குறிப்பிட்ட உணவுப்பொருட்கள் (திருத்த) உத்தரவு 2021 மீதான இருப்பு வரம்புகள் மற்றும் இயக்க கட்டுப்பாடுகளை நடுவணரசு நடைமுறைக்கு கொண்டுவந்துள்ளது. இவ்வுத்தரவின்படி, மொத்த விற்பனையாளர்கள், சில்லறை விற்பனையாளர்கள், ஆலை உரிமையாளர்கள் மற்றும் பருப்பு வகைகளை இறக்குமதி செய்பவர்களுக்கு இருப்பு வரம்புகள் விதிக்கப்பட்டுள்ளன.

✓ அக்.31 வரை, அனைத்து மாநிலங்கள் & யூனியன் பிரதேசங்களுக்கும் பயித்தம் பருப்பு தவிர அனைத்து பருப்பு வகைகளையும் இருப்பு வைப்பதற்கான வரம்புகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. பருப்புவகைகளின் விலை தொடர்ந்து உயர்ந்து வருவதால் இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

---

**6. இந்தியாவின் முதல் மத்திய மருந்து ஆய்வகம் நிறுவப்பட்டுள்ள மாநிலம் எது?**

அ) கர்நாடகா



ஆ) உத்தர பிரதேசம்

**இ) இமாச்சல பிரதேசம் ☑**

ஈ) மகாராஷ்டிரா

✓ மத்திய மருந்து ஆய்வகம், கசௌலி என்பது மனித பயன்பாட்டிற்கான நோய்த்தடுப்பு மருந்துகளை (தடுப்பூசிகள் மற்றும் எதிர் ஊனீர்) பரிசோதிப்பதற்கான தேசிய கட்டுப்பாட்டு ஆய்வகமாகும். அண்மையில், தன்னாட்சி ஆராய்ச்சி நிறுவனங்களான புனேயில் உள்ள தேசிய செல் அறிவியல் மையத்தில் ஓர் ஆய்வகத்தையும், ஹைதராபாத்தில் உள்ள தேசிய விலங்கு உயிரித் தொழில்நுட்பவியல் ஓர் ஆய்வகம் என இரு நடுவணரசு ஆய்வகங்களை நடுவணரசு அமைத்துள்ளது.

---

**7. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற பஞ்சுமுலி ஏரி அமைந்துள்ள மாநிலம் எது?**

அ) கேரளா



ஆ) பஞ்சாப்

**இ) குஜராத் ☑**

ஈ) ஹரியானா

✓ குஜராத்தின் கெவாடியாவில் உள்ள சர்தர் வல்லபாய் படேல் 'ஒற்றுமை சிலை' அருகே அமைந்துள்ளது பஞ்சுமுலி ஏரி. சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பிற்காக கடந்த இரண்டு ஆண்டுகளில் 194 முதலைகள் இந்த ஏரியிலிருந்து இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதால் இது சமீப செய்திகளில் இடம்பெற்றது. அதிகாரிகளின் கூற்றுப்படி, 2019–20ஆம் ஆண்டில் 143 முதலைகள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளன, 51 முதலைகள் 2020–21'இல் இரு மீட்பு மையங்களுக்கு மாற்றப்பட்டுள்ளன.

---

**8. இந்தியாவின் மன்னா படேலுடன் தொடர்புடைய விளையாட்டு எது?**

அ) துப்பாக்கிச்சுடுதல்



ஆ) சீருடற்பயிற்சி

இ) வில்வித்தை

**ஈ) நீச்சல் ☑**

✓ 'பொதுமை ஒதுக்கீடு' மூலம் டோக்கியோ 2020 ஒலிம்பிக்கிற்கு தகுதி பெற்ற முதல் இந்திய நீச்சல் வீராங்கனை என்ற பெருமையை 2 ஜூலை 2021 அன்று மானா படேல் வரலாறு படைத்தார். 'பொதுமை ஒதுக்கீடு' ஆனது ஒரு நாட்டிலிருந்து ஓர் ஆண் மற்றும் ஒரு பெண்போட்டியாளரை ஒலிம்பிக்கில் பங்கேற்க அனுமதிக்கிறது. 21 வயதான மானா படேல், இம்மாத கோடைகால ஒலிம்பிக்கிற்கான இந்தியாவின் நீச்சல் அணியில், சஜன் பிரகாஷ் மற்றும் ஸ்ரீஹரி நடராஜன் ஆகியோருடன் இணைவார்.

**9. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற இராம்பால் மின் நிலையம் அமைந்துள்ள நாடு எது?**



**அ) வங்காளதேசம் ☑**

ஆ) பாகிஸ்தான்

இ) நேபாளம்

ஈ) கென்யா

✓ இராம்பால் மின் நிலையமானது 1320 மெகாவாட் மின்னுற்பத்தித்திறன் கொண்ட நிலக்கரி அடிப்படையிலான மின்னுற்பத்தி நிலையமாகும். இது தற்போது வங்காளதேசத்தின் குல்னாவில் உள்ள பாகர்ஹாட் மாவட்டத்தின் இராம்பால் உபசிலாவில் கட்டுமான நிலையில் உள்ளது. இது அந்நாட்டின் மிகப்பெரிய மின்னுற்பத்தி நிலையமாக இருக்கும். இதனை BIFPCL (Bangladesh India Friendship Power Company Limited) அமைத்து வருகிறது.

---

**10. 2021 ஜூலை.1 அன்று வான்படைப்பணியாளர்களின் புதிய துணைத்தலைவராக பொறுப்பேற்றுக்கொண்டவர் யார்?**



அ) ஏர் மார்ஷல் பாலபத்ர இராதா கிருஷ்ணா

**ஆ) ஏர் மார்ஷல் விவேக் ராம் சௌதாரி ☑**

இ) ஏர் மார்ஷல் ஹர்ஜித் சிங் அரோரா

ஈ) ஏர் மார்ஷல் குருச்சரண் சிங் பேடி

✓ வான்படைத்தளபதியான விவேக் ராம் சௌதாரி, 2021 ஜூலை.1 அன்று வான்படைப்பணியாளர்களின் துணைத்தலைவராக பொறுப்பேற்றார். 1982 டிசம்பர் 29 அன்று விமானப்படையின் போர்படைப்பிரிவில் அவர் நியமிக்கப்பட்டார். பல்வேறு வகையான போர் & பயிற்சி வானூர்திகளில் 3800 மணிநேரத்திற்கும் மேல் அவர் பறந்துள்ளார்.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. தமிழ்நாட்டில் வளர்ச்சிப் பணிகளுக்கு ₹40 ஆயிரம் கோடி கடனுதவி**

நபார்டு வங்கி நடப்பு நிதியாண்டில், தமிழக வளர்ச்சிப் பணிகளுக்காக, ₹40 ஆயிரம் கோடி கடனுதவி வழங்க உள்ளதாக தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் வெ இறையன்பு இஆப தெரிவித்தார். தேசிய வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு வங்கியின் (நபார்டு வங்கி) 40ஆவது நிறுவன தினம் கொண்டாடப்பட்டது. இந்நிகழ்ச்சியில், தமிழக அரசின் தலைமைச் செயலாளர் வெ இறையன்பு சிறப்பு விருந்தினராகப் பங்கேற்றார். அவர் காணொலி மூலமாக உரையாற்றிய போது, நபார்டு வங்கி 2020-21ஆம் ஆண்டு நிதியாண்டில், தமிழகத்தின் பல்வேறு வளர்ச்சி பணிகளுக்கு ₹27,135 கோடிகடனுதவி வழங்கியது. நடப்பு நிதியாண்டில் ₹40 ஆயிரம் கோடி வழங்க உள்ளது என்றார் அவர்.

---

**2. தமிழக பல்கலை – ஆஸ்திரேலியா இடையே 83 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்: அமைச்சர் க பொன்முடி**

தமிழ்நாட்டில் உள்ள பல்கலைக்கழகங்கள் – ஆஸ்திரேலியா இடையே 83 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக உயர் கல்வித்துறை அமைச்சர் க பொன்முடி தெரிவித்தார்.

---

**3. நேபாள பிரதமராக ஷேர் பகதூர் தாபா பதவியேற்பு**

நேபாள பிரதமராக 5ஆம் முறையாக ஷேர் பகதூர் தாபா பதவியேற்றுக் கொண்டார். இதன்மூலம் ஐந்தாம் முறையாக பிரதமரானவர் என்ற சாதனையை அவர் படைத்தார். முன்னாள் பிரதமர் கே பி சர்மா ஒலியின் பரிந்துரையை ஏற்று கீழவையை அதிபர் வித்யாதேவி பண்டாரி கலைத்தது செல்லாது எனவும், ஜூலை 13'க்குள் புதிய பிரதமராக நேபாள காங்கிரஸ் தலைவர் ஷேர் பகதூர் தாபா பதவியேற்க வேண்டும் எனவும் உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்தது.

---

**4. 10ஆவது பி–8ஐ போர் விமானம் இந்தியா வருகை**

நீர்மூழ்கிக் கப்பலைத் தாக்கி அழிக்கவல்ல 10ஆவது பி–8ஐ போர் விமானம் அமெரிக்காவிலிருந்து இந்தியா வந்தடைந்தது.

அமெரிக்காவின் போயிங் நிறுவனத்திடமிருந்து 8 பி–8ஐ போர் விமானங்களைக் கொள்முதல் செய்வதற்கு மத்திய அரசு கடந்த 2009ஆம் ஆண்டில் ஒப்பந்தம் மேற்கொண்டது. அதையடுத்து, கூடுதலாக 4 போர் விமானங்களை வாங்க கடந்த 2016'இல் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

முதல் பி–8ஐ போர் விமானம் கடந்த 2013'இல் இந்திய கடற்படையில் இணைக்கப்பட்டது. அப்போதிலிருந்து 30,000 மணி நேரத்துக்கு அதிகமாக அந்தப் போர் விமானங்கள் பறந்து பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ளன. இந்திய கடற்பகுதியைக் கண்காணிப்பதில் பி–8ஐ விமானங்கள் முக்கிய பங்கு வகித்து வருகின்றன. அந்தப் போர் விமானங்கள் நீர்மூழ்கிக் கப்பலைத் தாக்கி அழிக்கும் திறன் கொண்டவையாகும். 9ஆவது பி–8ஐ போர் விமானம் கடந்த ஆண்டு நவம்பரில் இந்தியாவுக்கு வந்தது. தற்போது 10ஆவது போர் விமானம் வந்தடைந்துள்ளது.

இது தொடர்பாக பாதுகாப்பு அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையில், 'கடந்த 2016ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் 2ஆவது போர் விமானம் இந்தியாவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. கடல் பாதுகாப்பில் முக்கிய பங்கு வகிப்பதோடு மட்டுமல்லாமல், பேரிடர் மீட்புப் பணிகளிலும் பி–8ஐ போர் விமானங்கள் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றன. போர் விமானங்களை இயக்குவதில் இந்திய கடற்படையினருக்கு போயிங் நிறுவனமே பயிற்சியளித்து வருகிறது.

அப்போர் விமானங்களுக்குத் தேவையான உபகரணங்கள், பராமரிப்பு சேவைகள் உள்ளிட்டவற்றையும் அந்நிறுவனமே வழங்கி வருகிறது' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

---

**5. பிரதமரின் ஏழைகள் நல உணவுத் திட்டம்: 15.30 லட்சம் மெட்ரிக் டன் உணவு தானியங்கள் விநியோகம்**

பிரதமரின் ஏழைகள் நல உணவுத் திட்ட 4ஆம் கட்டத்தின் கீழ் இதுவரை தமிழகம் உள்பட 31 மாநிலங்களுக்கு 15.30 லட்சம் மெட்ரிக் டன் உணவு தானியங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளதாக நடுவணரசு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக மத்திய உணவுத் துறை அமைச்சம் வெளியிட்ட அறிக்கையில், "கரோனா தொற்று காலத்தில் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்யும் நோக்கில், இலவசமாக உணவு தானியங்கள் வழங்குவதற்கு பிரதமரின் ஏழைகள் நல உணவுத் திட்டத்தை கடந்த ஆண்டு மத்திய அரசு தொடங்கியது.

இந்தத் திட்டத்தின் நான்காம் கட்டம் இவ்வாண்டு நவம்பர் மாதம் வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. இந்தக் கட்டத்தின் கீழ் விநியோகிக்க 198.79 லட்சம் மெட்ரிக் டன் உணவு தானியங்களை மத்திய அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. அதில் கடந்த 12–ஆம் தேதி வரை தமிழகம் உள்பட 31 மாநிலங்களுக்கு 15.30 லட்சம் மெட்ரிக் டன் உணவு தானியங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன. இந்த ஆண்டு மே மாதம் முதல் நவம்பர் மாதம் வரை மாதந்தோறும் 5 கிலோ உணவு தானியங்களை 80 கோடிக்கும் அதிகமானவர்களுக்கு இலவசமாக வழங்க மத்திய அரசு ₹93,869 கோடி செலவிடவுள்ளது" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

**6. உலக பாட்மிண்டன்: 2026–இல் இந்தியா நடத்துகிறது**

2026–ஆம் ஆண்டு உலக பாட்மிண்டன் சாம்பியன்ஷிப் போட்டியை இந்தியா நடத்தும் என உலக பாட்மிண்டன் சம்மேளனம் அறிவித்தது.

முன்னதாக, 2023–இல் சுதிர்மான் கோப்பை போட்டியை இந்தியா ஒருங்கிணைக்க இருந்த நிலையில், அப்போட்டியை ஒருங்கிணைக்கும் பொறுப்பை சீனாவிடம் ஒப்படைத்தது உலக பாட்மிண்டன் சம்மேளனம். நடப்பாண்டில் சீனாவில் நடைபெற இருந்த சுதிர்மான் கோப்பை போட்டி, கரோனா சூழல் காரணமாக தற்போது பின்லாந்தில் நடைபெறவுள்ளது. உலக சாம்பியன்ஷிப் போட்டியை இந்தியா நடத்துவது இது 2ஆவது முறையாகும். முன்னதாக 2009'இல் ஹைதராபாதில் அந்தப்போட்டியை இந்தியா ஒருங்கிணைத்துள்ளது.

---

**7. ஒலிம்பிக் ஜிம்னாஸ்டிக்ஸ் நடுவராக தகுதிபெற்ற முதல் இந்தியர் தீபக் காப்ரா**

டோக்கியோ ஒலிம்பிக்கில் ஜிம்னாஸ்டிக்ஸ் விளையாட்டுக்கான நடுவராக இந்தியாவைச் சேர்ந்த தீபக் காப்ரா (33) தேர்வு செய்யப்பட்டுள்ளார். இத்தகைய பெருமையைப் பெறும் முதல் இந்தியர் அவராவார். டோக்கியோ ஒலிம்பிக்கில் வரும் 23ஆம் தேதி முதல் நடைபெறும் ஆடவருக்கான ஆர்ட்டிஸ்டிக் ஜிம்னாஸ்டிக்ஸ் பிரிவில் நடுவராக அவர் செயல்பட இருக்கிறார்.

மகாராஷ்டிர மாநிலத்தைச் சேர்ந்த தீபக் தனது 12ஆவது வயதில் ஜிம்னாஸ்டிக்ஸ் விளையாடத் தொடங்கியுள்ளார். அப்போது குஜராத் மாநிலம், சூரத்தில் இருந்த அவருக்கு, பயிற்சிக்கான போதிய வசதிகள் கிடைக்கவில்லை. இருப்பினும் முயற்சித்து 2007'இல் அஸ்ஸாமில் நடைபெற்ற தேசிய அளவிலான விளையாட்டில் பங்கேற்றார். 2005 முதல் 2009 வரை குஜராத் மாநில சாம்பியனாக இருந்துள்ளார்.